# அன்னைக்கு

மு.வரதராசன்

P. Karuppiah
KARAIKUDI.

அன்னைக்கு

டாக்டர் மு. வரதராசன்

# அன்னைக்கு

டாக்டர் - மு. வரதராசன், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி

[illegible]யுகப்புத்தகாலயம்,
காரைக்குடி,
விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை - 1

ரூ. 1-0-0

ஆரம்பதிப்பு : அக்டோபர் 1956

உரிமை ஆசிரியருக்கு

ஆசிரியரின்

(கடிதங்கள் பற்றிய) மற்ற நூல்கள் :

தம்பிக்கு

தங்கைக்கு

நண்பர்க்கு

யான்கண்ட இலங்கை

நாயக வெளியீடு, சென்னை - 30

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை - 14

# முன்னுரை

காலம் என்பது மக்களின் தனிவாழ்க்கையை வரையறுப்பது போலவே, நாட்டின் வாழ்வையும் வரையறை செய்வதாகும். தமிழ்நாட்டின் வரலாறும் காலத்தின் போராற்றலுக்குக் கட்டுப்பட்டு விளங்கிவருகின்றது. இப்போது பலரும் காண்பது பழைய தமிழகத்தின் மறைவும் புதிய தமிழகத்தின் தோற்றமுமாகும்.

பழைய தமிழகத்தி லிருந்தே புதிய தமிழகம் தோன்றி வளர்ந்துவருகின்றது. பழைய தமிழகம் தாய்; புதிய தமிழகம் ஒரு சேய் : தாயிடமிருந்து சேய் கற்க வேண்டியவை பல உள்ளன. புதிய தமிழகம் பலவகையில் வேறுபட்ட வளர்ச்சி உடையது ஆனாலும், பழைய தமிழகமாகிய அன்னையின் அனுபவ அறிவுரைகளைப் புறக்கணிக்க முடியாது. அந்த அறிவுரைகளைப் புதிய தமிழகம் எவ்வளவிற்கு ஏற்கின்றது என்பதையும் எவ்வாறு ஏற்கின்றது என்பதையும் ' எழில் 'லின் கடிதங்கள் காட்டுகின்றன.

இவற்றுள் முதல் ஆறனையும் வெளியிட்டு உதவிய " தமிழ் முரசு " ஆசிரியர்க்கு நன்றி செலுத்துகின்றேன்.

1—5—'48
சென்னை

மு. வ.

# 1

அன்புள்ள அம்மா,

**வி**டுமுறையில் இரண்டு வாரம் வீட்டில் இருந்து விட்டு வரலாம் என்று மகிழ்ச்சியோடு புறப்பட்டு வந்தேன். ஆனல் நீயும் அப்பாவும் எனக்கு இல்லாத கவலையை எல்லாம் ஏற்படுத்தி ஆயிரம் உபதேசம் செய்து திரும்பச் செய்திருக்கின்றீர்கள். இப்படி உண்மையை ஒளிக்காமல் எழுதியதற்காக என்னை மன்னிக்கவேண்டும். உங்கள்மேல் உள்ள அன்பாலும் நம்பிக்கையாலும் இவ்வாறு எழுதுகிறேன்; இல்லையானல் வெறுங் கதையை எழுதி உள்ளத்தை மறைத்து வைக்க என்னல் முடியாதா? அதனல் எனக்குப் பயனில்லை; உங்களுக்கும் பயனில்லை; தபால்நிலையத்திற்கு ஒன்றரையணு கிடைத்திருக்கும். அதுதான் பயனுக இருந்திருக்கும்.

நான் ஊரில் இருந்தபோது வெறும் பள்ளிக்கூடத்துப் பையனுக இருந்தேன். அரசியல், சமூகம், சமயம் இவற்றைப் பற்றி எண்ணவே தெரியாத நிலையில் இருந்தேன். ஆனல் இங்கே வந்த பிறகு அப்படி இருக்க முடியவில்லை. "போன வேலையை மறந்து விடாதே; கடமையை மறந்து கவலையற்றுத் திரியாதே; உன்னைச் சென்னைக்கு அனுப்பியது எதற்காக?

கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்று வருவதற்காக. அதை மறக்காதே " என்று அப்பா அவ்வளவு வற்புறுத்திச் சொல்லி அனுப்பினர்.

அவர் ஏன் இவ்வாறு வற்புறுத்திச் சொன்னர் என்பதை நீ சொன்னபோதுதான் தெரிந்துகொண்டேன். சென்னையில் நான் தங்கிப் பழகியது மூன்று மாத காலமே. அதற்குள் நான் அரசியலில் மிகுதியாகக் கலந்துகொண்டதாக அவர் தெரிந்துகொண்டிருக்கிருர் என்றும், என் பேச்சில் அடிக்கடி அரசியல் வந்தது என்றும் நீ எடுத்துச் சொன்னது எனக்கு நல்லதே. கல்லூரியிலும் ஆசிரியர்கள் பலரும் அரசியலில் கலந்துவிட வேண்டாம் என்றுதான் அறிவுரை புகட்டுகின்ருர்கள். ஆனுல், கல்லூரிச் சங்கங்களில் வந்து பேசும் அறிஞர்கள்மட்டும் அவ்வாறு சொல்வதே இல்லை. அந்த அறிஞர்கள் பேசுவதெல்லாம் அரசியல் தவிர வேறு ஒன்றும் இல்லை. " மாணவர்களே எதிர்கால இந்தியாவை அமைக்கப் போகின்றவர்கள் ; ஆளப் போகின்றவர்கள் ; எதிர்காலமே உங்கள் கையில்தான் இருக்கின்றது " என்று சிலர் பேசிவிட்டுப் போகின்ருர்கள். மற்றும் சிலர், " நீங்கள் மாணவர்கள் என்று இந்தக் கல்லூரிகளுக்கு வந்திருப்பது, வெறும் புத்தகப் பூச்சிகளாய் இருந்துவிட்டுப் போவதற்காக அல்ல ; பயனற்ற பட்டங்களைப் பெற்றுவிட்டு அடிமைகளாய் அல்லல்படுவதற்கு அல்ல ; அறிவும் உணர்வும் பெற்று உரிமையோடு வாழ்க்கையை நடத்தக் கற்பதற்காகவே " என்று பேசி எங்களுக்கு அரசியல் உணர்வை ஊட்டிவிட்டுப் போகின்ருர்கள்.

இவ்வாறு நான் எழுதுவதால், அரசியலை விடப் போவதில்லை என்று பிடிவாதம் செய்வதாக எண்ண வேண்டாம். நான் ஓயாமல் கல்லூரிப் பாட நூல்

களையே படித்து வருகின்றேன். நண்பர்களோடு அளவளாவும் நேரத்தையும் ஊர் சுற்றும் நேரத்தையும் குறைத்து வருகின்றேன். அப்பா எதிர்பார்த்தபடி முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுவதை மறந்துவிட மாட்டேன். நல்ல வகையில் தேர்ச்சிபெற்றே வருவேன்.

ஆனல், ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். நாள் தோறும் காலையில் செய்தித்தாள் வாங்கிப் படிக்கும் வழக்கத்தை விட முடியவில்லை. அதை விட்டுவிடும் படியாக நீயும் சொல்லவில்லை. அப்பாவும் சொல்ல வில்லை. அதற்கு மாருக, படிக்கும்படியாகச் சொல்லி வழிகாட்டியவர் அவரே அல்லவா? "பத்திரிகை படிக்காவிட்டால் உலகம் தெரியாத முட்டாள் ஆகி விடுவாய்" என்று சென்ற ஆண்டில் அவர் எனக்குச் சொன்னதை நான் மறக்கவில்லை. ஆனல், அவர் நம் ஊரிலிருந்துகொண்டு அமைதியாகச் செய்தித்தாளைப் படித்துவிட்டுப் பேசாமல் இருக்கிருர். சென்னையில் அப்படி அதைப் படித்துவிட்டு அமைதி அடைய முடியாது; என்னல் முடியாது. அவர் நிலைமை எப்படியோ? அவருக்குச் செய்தித்தாள் படிப்பது ஒரு சடங்காக இருக்கலாம். எனக்கு வாழ்க்கை ஆராய்ச்சியாக இருக்கின்றது! என்ன செய்வேன்?

ஆகையால், நான் அரசியல் அறிவு பெருமல் இருக்கவேண்டுமானல், முதல் கடமையாகச் செய்தித் தாள் படிக்காமல் இருக்கவேண்டும். இது முடியுமா?

இரண்டாவதாக, உணர்ச்சியற்ற கல்மனம் வேண் டும். அது இயலுமா? உன் வயிற்றில் பிறந்து உன் உணர்வால் வளர்ந்த எனக்கு அது கிட்டுமா?

மூன்ருவதாக, என்னை நீங்கள் சென்னைக்கு அனுப்பியிருக்கக் கூடாது. சென்னை ஒரு பெரிய

நகரம் அல்லவா? வெவ்வேறு மொழி பேசும் மக்கள் வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்து இங்குப் பலவகைத் தொழில் செய்து பிழைக்கின்றார்கள் அல்லவா? அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையாகவும் அன்பாகவும் கலந்து பழகி வாழ்வதைக் காணும்போது, நாமும் அப்படி வாழவேண்டும், பழக வேண்டும் என்றெல்லாம் நல்ல எண்ணங்கள் எழுகின்றன. இந்த எண்ணங்களை எப்படித் தடுக்க முடியும்?

நல்ல எண்ணங்கள் என்று குறிப்பிட்டேன். அம்மா நீ ஒப்புக்கொள்வாயோ, இல்லையோ, தெரியவில்லை. இந்த எண்ணங்களில் தீமை ஒன்றும் இல்லை என்று நான் நம்புகின்றேன். என்னுடன் விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் ஐந்துபேர் இதை ஒப்புக்கொள்ளாமல் மறுத்தார்கள்; அதுமட்டும் அல்ல; என்மேல் வெறுப்பும் காட்டி வருகின்றார்கள்; உள்ளத்தில் பகையும் வளர்க்கின்றார்கள்.

இந்த விடுதியில் மலையாளத்து மாணவர்கள் தங்கிப் படிக்கின்றார்கள்; ஆந்திர நாட்டு மாணவர்கள் தங்கிப் படிக்கின்றார்கள். அவர்கள் அன்பாகப் பழகுகின்றார்கள்; ஒற்றுமையாக இருக்கின்றார்கள். இப்படி நாமும் இருக்கவேண்டும் என்று என்னுடன் உள்ள தமிழ் நாட்டு மாணவர்களுக்குச் சொன்னேன். இது தான் குற்றமாக முடிந்தது. இதனால் மறுத்தார்கள்; வெறுத்தார்கள்; பகைக்கின்றார்கள்.

"வெளிநாட்டு மாணவர்கள் இங்கே வந்து ஒற்றுமையாக இருந்து முன்னேறுகின்றார்கள்; இந்த நாட்டைத் தாய்நாடாகக் கொண்டுள்ள நாம் முன்னேற வேண்டாமா?" என்று கேட்டேன். இது பெரிய குற்றமாம்! மலையாளத்தாரையும் ஆந்திரரையும் வெளிநாட்டார் என்று எண்ணியதும் பாவமாம்!

எனக்குத் தேசபக்தி இல்லையாம்! தமிழ், தமிழ்நாடு என்று பேசும் வெறி எனக்குப் பிடித்துவிட்டதாம்!

அம்மா! இவ்வாறு தமிழ் மாணவர்கள்—நம்மவர்கள் என்னைக் குறைகூறியதைப் பற்றிக் கவலை இல்லை. அதற்குமேல் நடந்ததுதான் வியப்பாக இருக்கின்றது. இந்தக் குறையை அவர்களே ஆந்திரர்க்கும், மலையாளத்தார்க்கும், குஜராத்தியர்க்கும் ஆங்கிலத்தில் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்துகொண்டு என் எண்ணம் குறுகிய நோக்கம் என்று குற்றம் சாட்டினார்கள். அவர்கள் தங்கள் தங்கள் மொழியையும் நாட்டையும் உயர்த்திப் பேசி ஒற்றுமைப்படுகின்றார்கள். ஆனால் நாம் நம் நாட்டையும் மொழியையும் உயர்த்திப் பேசினால் குறையாம், குற்றமாம், குறுகிய நோக்கமாம்! என் வீட்டு வாசற்படியில் வலிய வந்து உட்கார்ந்துகொண்டு தங்கள் தங்கள் தாய்மார்களின் பெருமைகளைப் பாராட்டுகின்றார்கள். அது கடமையாம். ஆனால், என் வீட்டினுள்ளே, என் எல்லையில் இருந்துகொண்டு என்னைப் பெற்ற தாயைப் பற்றி நான் வாய்திறக்கக் கூடாதாம். என்ன கொடுமை அம்மா!

நான் ஒன்று கேட்டேன்: " உலகம் வாழவேண்டும் என்று எண்ணாமல், இந்தியா வாழவேண்டும் என்று எண்ணுவது குறுகிய நோக்கம்தானே?" என்று. " உலகத்தின்மேல் அன்பும் தேசத்தின்மேல் பக்தியும் வேண்டும் " என்று தமிழ் மாணவர் ஒருவரே பதில் சொன்னார். என்னால் அப்போதும் அடங்கியிருக்க முடியவில்லை. " உலகத்தின்மேல் அன்பும் தேசத்தின்மேல் பக்தியும் இருப்பது உண்மையானால், தமிழ் நாட்டின்மீது தமிழனுக்குக் காதல் இருக்க வேண்டும்" என்று வீறுடன் சொன்னேன். அங்கிருந்த

தமிழ் மாணவர் அத்தனை பேரும் என்னைத் திரும்பிப் பாராமல் எழுந்து போய்விட்டார்கள். அவர்களின் ஒத்துழையாமையைக் கண்ட மலையாளத்தாரும் மற்றவர்களும் "தமிழர்களே இப்படித்தான்" என்று எள்ளி நகைத்துக்கொண்டே சென்றார்கள்.

அன்றுமுதல் என்னைக் காணும்போதெல்லாம் அன்பு முகம் இல்லை; பொறாமை முகம் மற்ற நாட்டாரிடம் உள்ளது; புழுங்கும் முகமே என் அருமைத் தமிழரிடமும் உள்ளது.

அம்மா! இது நடந்து ஆறு நாட்கள் ஆயின. எண்ணி எண்ணிப் பார்த்தேன். இதுவரையில் காரணம் தெரியவில்லை. இன்றுதான் தெரிந்தது. மற்ற நாட்டு மக்கள் தங்கள் மொழி தங்கள் நாடு என்று பற்றுக் கொண்டு தற்காப்போடு வாழும் வாழ்க்கையை இயற்கையாகவே நெடுங்காலமாக உடையவர்கள். அதனால் அவர்களுக்கு அது குறையாகவும் குற்றமாகவும் தெரிவதில்லை. அவர்கள் இன்றுவரையில் தங்கள் வீடுகளுக்குக் கதவும் தாழும் பூட்டும் அமைத்தே பழகிவிட்டவர்கள்.

தமிழர்கள் இன்றுதான் அவர்களைப் பார்த்துக் கதவும் தாழும் பூட்டும் அமைக்க முயல்கின்றார்கள். தங்கள் மொழி, தங்கள் நாடு இவற்றை மறந்து பிற நாட்டார்க்கு உதவியாகவே வாழ்ந்து விருந்தோம்பும் கடமையை மேற்கொண்டவர்கள் தமிழர்கள். வெளி நாட்டார்க்காகவே – வாயிற்படியை அண்டி வந்தவர்க்காகவே – வீட்டில் திண்ணையும் கட்டி அரசியலில் அறமும் அமைத்து வாழ்ந்த தமிழர்கள் அவ்வாறே இக்காலத்திலும் வாழாமல் தற்காப்புத் தேடிவருவது மற்றவர்களுக்குப் புதுமையாக இருக்கின்றது. அந்தப்

புதுமையைக் காண அவர்களுக்கு மனம் பொறுக்க வில்லை.

தமிழர்கள் ஏன் மாறிவரவேண்டும் என்றும் எண்ணிப்பார்த்தேன். கண்மூடி வாழ்ந்து ஏமாந்து நின்ற காரணத்தால் தமிழனிடம் பொருள் வளமும் குறைந்து வறண்டது ; தான் உண்ணுமல் பிறர் வயிற்றையே நிரப்பிய பாவத்தால், தமிழன்கை தசை சுருங்கி மெலிந்து வாடி நீட்டவும் வலியிழந்து நிற்கின்றது. இந்த நிலை உற்றதனுல் வாழ்க்கைப் போராட்டம் தமிழனையும் தாக்குவதாயிற்று. மற்றவர்களுக்கு உதவும் நிலையில் வள்ளலாக இருந்த தமிழன் மற்றவர்களைப்போல் தற்காப்புத் தேடி வாழவேண்டிய நிலைக்கு வந்துவிட்டான். இதுதான் குறை, குற்றம், குறுகிய நோக்கம் !

மற்றவர்களிடம் பொருள் வளம் மிகுந்து வருகின்றது. அவர்களுடைய கைகள்மட்டும் பொருள் ஈட்டவே பிறந்த கைகளா ? தமிழனை வறுமை வாட்டுகின்றது. அதைப் பற்றிப் பேசுவதும் குற்றமா ? தமிழன்கை பிறர்க்கு உதவியாக நீட்டவும் முடியாமல் வாடி மெலிந்துவிட்டது. அதை உணர்ந்துகொள்வதும் குற்றமா ? நான் இதைப் பற்றி எண்ணுவதும் எழுதுவதும் அரசியலா ? குற்றமா ? அப்படியானுல், எண்ணும் மூளையையும் எழுதும் கையையும் தமிழனுக்குப் படைத்த படைப்பின்மீதே குற்றம் கூற வேண்டும்.

இதை எழுதிக்கொண் டிருக்கும்போதுதான் பல மாகாணங்களில் பலவகையால் மக்கள் படும் கொடுந் துன்பங்களைப் பற்றிய செய்தி வந்துள்ளது. செய்தித் தாளைக் கண்டதும் என் மனம் குமுறி நின்றது. இவ்வாறு பிறர் துன்பம் கண்டதும் துடிப்பவன் தமிழனே. என்னை எடுத்துக்காட்டாக வைத்துக்

கொண்டு சொல்லவில்லை. என்னுடன் தங்கியுள்ள மாணவர்களில் தமிழர்களே இந்தச் செய்தி கேட்டு வருந்தி அல்லல்படுகின்றார்கள். மற்றவர்கள் வழக்கம் போல் அமைதியாகக் காபி அருந்திக்கொண்டிருக் கின்றார்கள். ஆனால், இப்படித் தலைமுறை தலைமுறை யாகப் பிறர் துன்பம் கேட்டுப் பொறுக்காமல் பிறர்க்கு உதவியாக வாழ்ந்த தமிழர்கள் வறுமைக் கடலில் தத்தளிக்கின்றார்கள். கரை யேற முயல்கின்றார்கள். ஆனால் பிறர் என்ன செய்கின்றார்கள்? நீந்தி வருகின்ற தமிழர்களின்மேல் கல் எறிகின்றார்கள். அவர்களோடு சேர்ந்துகொண்டு சில தமிழர்களும் கல் எறிகின்றார் கள். தமிழ்க் கல் வாழ்க என்று வாழ்த்துவதா?

அம்மா! தமிழ்நாட்டின் வரலாற்றிலிருந்து பெருமையான பகுதிகளை நான் எடுத்துச் சொன்ன போது, இவ்வாறு பழம்பெருமை பேசுவதால் பயனில்லை என்று நீயும் அப்பாவும் சொன்னீர்கள். "அதற்காக டில்லிப் பாராளுமன்றத்தில் தமிழர்களுக்கு இரண்டு இடம் மிகுதியாகக் கிடைத்துவிடுமா? உலகமும் மிகுதியாக மதித்துவிடுமா?" என்று என்னைக் கேட்டீர்கள். உண்மைதான். நீ சொன்ன குடும்ப உவமையையும் நான் மறக்கவில்லை. அத்தையின் மாமனார் ஏழையாக இருந்தார் என்றும், அவர் தம் மருமகன் என்ற காரணத்தால் முப்பாட்டனார் அத்தை யையும் அவரையும் தம் ஊருக்கே அழைத்துவந்து வீடும் கட்டிக்கொடுத்து மூன்று காணி நிலமும் எழுதி வைத்துப் பேரரையும் வளர்த்து முன்னுக்குக் கொண்டுவந்தார் என்றும், இப்போது அவர்களின் பேரப்பிள்ளைகளே நம் குடும்பத்திற்குப் பொல்லாத பகைவர்களாக இருக்கின்றார்கள் என்றும், முப்பாட்ட னார் செய்த உதவியை அவர்களுக்கு எடுத்துச்

சொன்னால் ஏற்குமா என்றும் நீ சொன்னவற்றை எல்லாம் இப்போதுதான் நன்றாக உணர்கின்றேன். இப்போது உள்ள தமிழர்களின் நிலைமையை ஒட்டியே இன்றைய உலகம் மதிக்கின்றது என்பது உண்மை தான். ஆனால் இப்போது உள்ள நிலைமையைத்தான் மேலே எழுதியிருக்கின்றேன். நம் குறைதான் ; ஆனால் தீர்க்க வழி என்ன ? தெரியவில்லை.

இதை அடியோடு மறந்துவிட மருந்து உண்டா ? இருந்தால் எழுத வேண்டுகின்றேன். அரசியல் என் படிப்பைக் கெடுக்காது என்று அப்பாவுக்குச் சொல்லக் கோருகின்றேன்.

அன்புள்ள மகன்,

எழில்

# 2

அன்புள்ள அம்மா,

உன் கடிதம் வந்ததும் எனக்கு ஒருவகை ஆறுதல் ஏற்பட்டது. அத்தையைப் பற்றியும் தமக்கையைப் பற்றியும் எழுதியிருந்த செய்திகளால் ஆறுதல் ஏற்படவில்லை. தந்தையைப் பற்றியும் நண்பரைப் பற்றியும் எழுதியிருந்த எழுத்துக்களாலும் ஆறுதல் ஏற்படவில்லை. ஆனால், நீயும் உன் பொன்னான கையால் 'தமிழர்களுக்கும் எதிர்காலம் உண்டு' என்று எழுதிய மணிமொழிகளே எனக்கு ஆறுதல் அளித்தன.

'தமிழர்களுக்கும் எதிர்காலம் உண்டு' என்று எழுதி ஆறுதல் அளித்த நீ, அதற்குக் காட்டிய காரணந்தான் எதிர்பாராததாக உள்ளது. 'எல்லாரும் பங்கு கேட்கின்றார்கள். ஆந்திரர்களுக்கு ஆந்திரமாகாணம் கேட்பது ஒரு சமயக் கொள்கைபோல் ஆகிவிட்டது. வடநாட்டில் மற்றவர்களும் மாகாணப் பற்றும் மாகாணக் கடமையும் மேற்கொண்டு பங்கு உரிமை கொண்டாடுகின்றார்கள். ஆகையால் மொழிவகையால் பிரித்துத் தமிழனையும் வாழவைக்கும் நாள் வரப் போகின்றது. அப்போது தமிழன் புதுப்பாடம் கற்றுக்கொள்ளப் போகின்றான்' என்று எழுதியிருக்கின்றாய். எனக்கு ஒன்றே புதுமையாய்த் தோன்றிற்று. அப்படியானால், தமிழன் தானே விரும்பி ஏற்றுத் தன் குடும்பக் கடமையைச் செய்யப் போவதில்லையா? பிறர் கட்டாயத்தால் ஏற்பட்டபோதுதான், வேறு வழி இல்லையே, என்று தன்னைத்தான் காத்துக்

கொள்ளத் துணிவாரோ? நன்றாயிருக்கின்றதே தமிழன் போக்கு!

எப்படியாவது போகட்டும். காலவெள்ளத்தில் நீந்திச் சென்றால் போதும். தமிழன் எப்படியாவது காலத்தை உணர்ந்து மாறுதல்களை உணர்ந்து வாழ்ந்தால் போதும். காலம் அறிந்து இடம் அறிந்து சூழல் அறிந்து வாழத் தெரியாத காரணத்தால், அன்னப் பறவையின் இனம் ஏறக்குறைய அழிந்துவிட்டதாம்; யானையின் இனமும் அழிந்துகொண் டிருக்கின்றதாம். தமிழனும் அப்படிப்பட்ட கண்மூடி வாழ்வு வாழாமல் தன் வாழ்வை மாற்றி அமைத்துக்கொண்டால் போதும். அன்னம் போலவும் யானை போலவும் உயர்ந்த வாழ்வு வாழ்ந்து புலவரால் பாடப்பட்டால் போதுமா? அப்படி வாழ்ந்து அழிந்து போவதைவிட, எறும்பு போலவும் காக்கை போலவும் அழியா வாழ்வு பெறுவதே நல்லது. எறும்பும் காக்கையும் எந்த இடத்திற்கும் காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்றபடி உண்டு வளர்ந்து வாழவில்லையா? வாழ்க்கைப் போராட்டத்தில் யானையும் அன்னமும் தோற்றுப்போக, எறும்பும் காக்கையும் வெற்றி பெறவில்லையா?

நான் நாட்டை நினைந்து வருந்தினேன். நீ வீட்டைஉதாரணமாக எடுத்துக்காட்டியிருக்கின்றாய். என் பாட்டனார் குடும்பத்தைப் பங்கிட்டுப் பிரிக்கக் கூடாது என்று நெடுங்காலம் தள்ளிவந்த கதையை நினைவுபடுத்தினாய். உண்மைதான் அம்மா! பாட்டனார் காலத்தில் எந்தப் பெரியவர்களுக்கும், அண்ணன் தம்பி என்றால் பங்கு கேட்கக்கூடாது,பிரியக்கூடாது,வாசற் படி இரண்டு ஆகக் கூடாது, அடுப்பங்கரை இரண்டு படக்கூடாது என்றெல்லாம் எண்ணம் தோன்றும். பாட்டன்மேல் குறை சொல்லிப் பயன் என்ன? அது

அந்தக் காலத்துப் போக்கு. ஆனால் அவ்வாறு பாட்டனார் காலந்தள்ளியபோது, தந்தையும் சிற்றப்பன்மாரும் என் வாய் மூடி அடங்கிக் கிடந்தார்கள்? இப்போது வீரம் பேசும் பங்காளிகள் அப்போது பங்கு வேண்டாம் என்று அமைதியாக இருந்தார்களா? இறுதியில் பாட்டனாரின் எண்ணம் பலிக்கவில்லை அல்லவா? அவர் வயிற்றில் பிறந்தவர்கள் அடிபட்டு உதைபட்டு அல்லல்பட்டுத் தெருவில் நின்றபோது, அதே பாட்டனார் கண்ணீர் விட்டுக்கொண்டே பங்கு போட்டுத் தரவில்லையா?

பாட்டனாரின் செயலால் நம் குடும்பத்திற்கும் பங்காளிக் குடும்பங்களுக்கும் மனக்கசப்பு மாறவில்லை. அதுபோல் அரசியலில் செய்வதால் இந்தியாவின் உட்பிரிவான நாடுகளுக்குள் கசப்பு நீடிக்குமே என்பதை நினைக்கும்போது வருத்தமாகவே இருக்கிறது.

அம்மா! உன் கடிதத்தில் "பாட்டனாரின் உயர்ந்த நோக்கத்தைக் காப்பாற்ற முயன்றதால், குடும்பம் கலகலக்க நேர்ந்தது" என்று எழுதியிருக்கின்றாய். அதில் உயர்ந்த நோக்கம் என்று நீ குறித்தது உண்மையான கருத்தா? அல்லது எள்ளும் குறிப்பா? தெரியவில்லை. என்னைக் கேட்டால் என்னால் சொல்லமுடியாது. ஆனால், உண்மையாகவே அது உயர்ந்த நோக்கம் என்று கொண்டாலும், பாகம் பங்கிடாமல் அண்ணன் தம்பிகள் நரைத்து மூத்துக் கிழவர்கள் ஆவது உயர்ந்த நோக்கம் என்றே கொண்டாலும், மனிதர்கள் அப்படி வாழக் கூடாது என்றே எண்ணுகின்றேன்.

உயர்ந்த நோக்கம், உயர்ந்த நோக்கம் என்று சொல்லி வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்வோர்

பலர் இருக்கின்றார்கள். அவர்களில் பாட்டனாரும் ஒருவர். இன்றுள்ள அரசியலில் அவரைப் போல் இருப்பது நன்மையா?

நோக்கமும் கொள்கையும் மக்கள் வாழ்க்கைக் காக மக்களுக்காக ஏற்பட்டவைகளே. மதமும் மொழி யும் அப்படியே மக்களின் நன்மைக்காக ஏற்பட்டவை களே. ஆனால், இன்று இந்தியா முழுதும் நான் காணும் காட்சி மதத்துக்காக, மொழிக்காக, நோக்கத் துக்காக, கொள்கைக்காக என்று இப்படிப்பட்ட காரணங்களுக்காக, மக்கள் சாகின்றார்கள்; வதை கின்றார்கள்; அஞ்சுகின்றார்கள்; அலைகின்றார்கள்; ஒருவரை ஒருவர் பகைக்கின்றார்கள்.

பட்டுப்பூச்சி தானே நூல் உண்டாக்கித் தன்னையே சுற்றிக்கொண்டு தானே ஏற்படுத்திய அந்த வலைக்குள் தானே கிடந்து வருந்துகின்றது அல்லவா? மனிதனும் அப்படியே தன் மூளைகொண்டு தானே ஏற்படுத்திக் கொள்கின்ற கொள்கைவலைக்குள் தானே அகப்பட்டு அழிகின்றான். இன்று உலகத்தில் மக்கள் படும் தொல்லைக்குக் காரணம் என்ன? பூனைகளோ அல்லது புலிகளோ மாநாடு கூடி மக்களைக் கெடுக்கச் செய்த சூழ்ச்சியா இது? அல்லது, கழுகுகளும் புழுக்களும் பிணங்கள் போதாத குறையை உணர்ந்து பிணங்களைப் பெருக்குவதற்காக ஏற்படுத்திய போர்களா இக்காலத் துப் போர்கள்? எந்த விலங்கும் எந்தப் பறவையும் எத் தகைய சூழ்ச்சியும் செய்து மனிதனைக் கெடுக்க முயலவில்லை. மனிதன் மூளையில் தோன்றிய சில தவறான எண்ணங்களுக்கு மனிதன் அடிமையாகி அழிந்து போகின்றான். வாழ்வுக்காகக் கண்டான் கொள்கைகளை. நாளடைவில் கொள்கைகளுக்காக் வாழ்வைப் பலிகொடுக்கின்றான். அரசியல் கொள்கை

வலுக்கின்றது; மதம் ஆகின்றது; எதிர்க்கட்சிகளை வளர்க்கின்றது; எதிர்பாராத போர்களை உண்டாக்குகின்றது. ஒன்றும் அறியாத பாமரமக்கள் படமுடியாத துன்பங்களைப் பட்டு வருந்துகின்றார்கள். உயர்ந்த நோக்கம்தான்; ஆனால் ஓயாத் தொல்லையாக மூள்கின்றது. காரணம் இல்லாமல் ஏழை மக்கள் துன்பங்களுக்கு ஆளாகின்றார்கள்; இதைக் கண்ட உலகத் தலைவர்கள் நெஞ்சம் கலங்குகின்றார்கள். மெல்ல மெல்ல உண்மையை உணர்த்தி உதவ முயல்கின்றார்கள். கொள்கையை விட, உயர்ந்த நோக்கத்தைவிட, பொது மக்களின் உயிர்வாழ்க்கை விலையுயர்ந்தது என்பதைத் தெளியச் செய்கின்றார்கள்.

மனிதன் குறை உடையவன் மட்டும் அல்ல; குறை காண்பவனும் அவனே. பிறர் குறையைக் காண்பவன் அரைமனிதன். தன் குறையை உணர்பவன் முழு மனிதன். அரசியலிலும் முழு மனிதர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் சிக்குண்ட வலையை அறுத்து வெளி வருகின்றார்கள்.

இப்படியே மனிதன் பல துறையிலும் தான் ஏற்படுத்திச் சிக்குண்ட வலையைத் தானே தகர்த்து அழித்து முன்னேறி வந்திருக்கின்றான். இன்று அரசியல் துறையில் பல வலைகளைப் பின்னி அமைத்துக் கொண்டு அல்லல் படுகின்றான். கட்சிகளை அமைத்து விட்டு அந்தக் கட்சிகளுக்காகத் தாங்கள் வாழவேண்டும் என்று மக்கள் தவறாக எண்ணுகின்றார்கள். பல வகைக் கட்சிகளால் நாட்டில் தொல்லை பெருகக் கண்டு கண்டு, “ கட்சிகள் நம் ஒற்றுமையான நல் வாழ்வைக் கெடுக்குமானால், நம்மைப் பாழ்படுத்துமானால், அந்தக் கட்சிகள் வேண்டுமா ? கட்சிகளுக்காக மக்கள் பலி

யாகக் கூடாது. மக்களுக்காகக் கட்சிகள் பலியாகட்டும்" என்று உணரும் நாள் வாராதா ?

அம்மா! நல்ல உதாரணம் எடுத்து எழுதினாய். பாட்டனார் கதை எனக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே நல்ல பாடம் என்று உணர்கின்றேன். உன் எளிய எழுத்து அன்பை மட்டும் அல்லாமல், அறிவையும் வளர்க்கும் என்பதைக் கண்டுகொண்டேன்.

அன்புள்ள மகன்,

எ ழி ல்

பிற்குறிப்பு :—அம்மா! கடிதத்தை முடித்த பிறகு ஒரு செய்தியை நினைத்துக்கொண்டு நானே சிரித்தேன். அதையும் இங்கே எழுதிவிடுகின்றேன். அதாவது : இந்த விடுதியில் தங்கியுள்ள மாணவர் ஒருவர் தேள் பாம்பு முதலியவற்றையும் கொல்லாத விரதம் உடையவர். நான்கு நாட்களுக்கு முன் அவருடைய அறையில் ஒரு தேள் எப்படியோ வந்துவிட்டது. அவரோ அதை அடிக்கவில்லை; அகற்றவும் இல்லை. எங்காவது கொண்டுபோய் விட்டுவிட்டால், அங்கே அதை ஏதாவது கொன்றுவிடுமே என்று கவலைப்பட்டார். அந்த அறையைப் பூட்டி வேறிடத்துக்குப் போய்விட்டார். அன்று நள்ளிரவில் அலறும் குரல் கேட்டு அந்த இடத்திற்கு ஓடிப் போய்ப் பார்த்தேன். பக்கத்து அறையில் இருந்த நண்பரின் படுக்கையில் தேள் வந்து கொட்டிவிட்டதாம். அவருக்கோ குளிர்ச்சியான உடம்பாம் ; படாத பாடு பட்டார். பாவம், ஒருவருடைய உயர்ந்த கொள்கை மற்றவருக்கு வேதனையாயிற்று. இப்படிப் பொது வாழ்விலும் தப்பி வாழ்ந்து மற்றவருக்குத் தீமை உண்டாக்குகின்றவர்கள் இருக்கின்றார்கள்.

# 3

அன்புள்ள அம்மா!

**நா**ன் எதிர்பார்த்ததற்கு மாருகவே உன் பதில் வந்தது. இவ்வளவு காலம் உன்னேடு பழகியிருந்தும் உன் மனத்தைத் தெரிந்துகொள்ளாதது உண்மையாகவே என்னுடைய குறைதான். இருளிலே கிடந்த எனக்கு ஒளி காட்டுவனபோல் இருக்கின்றன உன்னுடைய அருமைக் கருத்துக்கள். அவற்றைப் படித்து உணர்ந்தபின், என் அறிவிலேயே ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டுவிட்டது. ஏன்? என்னுடைய மூட நம்பிக்கையே தொலைந்தது என்று தான் சொல்லவேண்டும்.

கல்லூரிகளில் கல்லாதவர்களிடத்திலும், நாகரிகம் இல்லாதவர்களிடத்திலுமே மூட நம்பிக்கை வாழ்வதாக நான் இதுவரையில் எண்ணிக்கொண்டிருந்தேன். பல்லி சொல்லுவதைக் கேட்டுப் பதைப்பவர்களையும் பூனை குறுக்கே வரக் கண்டு கலங்குகின்றவர்களையும் மட்டுமே மூட நம்பிக்கை உடையவர்கள் என்று எண்ணிவந்தேன்; இப்போதுதான் உண்மை தெரிந்து கொண்டேன். அடுக்கடுக்காக நூல்களை வாங்கிப் படித்தவர்களிடமும், பட்டமும் புகழும் பெற்றவர்களிடமும் மூட நம்பிக்கை வேறு வேறு வடிவில் வாழ்வதாக உணர்கின்றேன். கல்லாதவன் பல்லி சொல்லுவதை நம்பித் தன் வாழ்க்கையை அளப்பது போலவே, கற்றவன் பத்திரிகை சொல்லுவதை நம்பி ஏமாறுகின்ருன். தலைமுறை தலைமுறையாக வந்த சில பழக்கங்களை வைத்துக்கொண்டு படிக்காதவன் தயங்குகின்ருன். கட்சியாட்கள் சொல்லும்

சில கருத்துக்களைக் கேட்டு மயங்கிப் படித்தவன் தயங்குகின்றான். அவனும் எண்ணிப்பார்த்து ஏற்றுக் கொள்வதில்லை. இவனும் அப்படித்தான் கண்மூடி வாழ்வு நடத்துகின்றான்.

அம்மா! எதையோ எழுதுகின்றேன் என்று எண்ண வேண்டாம். என்னுடைய சொந்த மூட நம்பிக்கையைத்தான் இங்கே குறிக்கின்றேன். இந்த மூட நம்பிக்கை இன்று பத்திரிகை படிக்கின்ற எல்லோருக்கும் பெரும்பாலும் உரியதாகவே இருக்கின்றது என்று சொல்வதில் தவறு உண்டா? நானும் அந்தக் கூட்டத்தில் ஒருவன். அதனால்தான் இதுவரையிலும் அப்படி எண்ணிவந்தேன்.

"நம் நாட்டில் நடந்தது மதச் சண்டை அல்ல; இனச் சண்டை. மதம், உயர்ந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. இனம் என்பதோ சில பழக்க வழக்கங்களையும் நிறம் முதலியவைகளையும் அடிப்படையாகக் கொண்டது. எல்லாரும் தவறாக மத வேற்றுமை கூடாது கூடாது என்று அறிவுறுத்துகின்றார்கள். அது பொருளற்ற முயற்சி. பொதுமக்கள், மதத்தின் உண்மைகள் தெரியாத நிலையில் இருக்கின்றார்கள். அவர்கள் பழக்க வழக்கங்களின் வேற்றுமையைத் தான் பாராட்டிக்கொண்டு பிரிந்து கலகம் செய்கின்றார்கள். அதற்கும் காரணம் ஒன்றுதான்; செல்வத்திலும் செல்வாக்கிலும் போதுமான பங்கு தங்கள் இனத்துக்கு வேண்டும் என்பதுதான்" என்று நீ எழுதிய அந்தப் பகுதியைத் தனியே கத்தரித்து எடுத்து ஒரு நல்ல அழகான அட்டையில் ஒட்டித் தொங்கவிட்டிருக்கின்றேன். அதை விடுதி மாணவர்கள் வந்து படித்துவிட்டுப் போகின்றார்கள்.

அவர்களில் ஒருவன்—என் நண்பன்தான்—என்னை ஒரு கேள்வி கேட்டான். அவனுடைய மூட நம்பிக்கையின் ஆழம் அப்போதுதான் தெரிந்தது. "பழக்க வழக்கங்கள் இல்லாமல் மதம் என்பது என்ன?" என்று என்னைக் கேட்டான். நான் அவனைப் பார்த்து, "இங்கிலாந்தில் உள்ள கிறிஸ்தவனுடைய பழக்க வழக்கங்கள் வேறு; சீனாவில் உள்ள கிறிஸ்தவனுடைய பழக்க வழக்கங்கள் வேறு; இந்தியாவில் உள்ள கிறிஸ்தவனுடைய பழக்க வழக்கங்கள் வேறு. இந்த மூவருடைய மதமும் ஒன்றே; ஆனல் அவர்கள் மூவரும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா?" என்று சொன்னேன். அதற்குள், பக்கத்தில் இருந்த மற்றொரு நண்பன், "அந்த மூன்று பேரும் கிறிஸ்தவர்கள் என்பதுமட்டும் உண்மையா? கிறிஸ்துவின் உயர்ந்த கொள்கைகள் அவர்களுடைய வாழ்க்கையில் உண்டா? கிறிஸ்தவராக உலகத்தில் பிறந்தவர் ஒருவரே. அவரும் சிலுவையில் மாண்டார். இப்படித்தான் அறிஞர் ஒருவர் சொல்கிருர்" என்று வெடிகுண்டுபோல் எடுத்துச் சொன்ஞன்.

எப்படியாயினும் ஆராய்ந்துபார்த்தால், நாட்டில் நடந்தது மதச்சண்டை அல்ல என்று முடிவுக்கு வரவேண்டும். மற்றவர்கள் சொன்னதை அப்படியே கேட்டு, எண்ணுமல் ஏற்றுக்கொண்டு இதுவரையில் மதச்சண்டை என்று நம்பி வந்தோம். இப்போது உண்மை நன்ருகத் தெரிகின்றது. சமயத்துறையில் ஆராய்ச்சியும் அன்பும் உடையவர்கள் மிக மிகச் சிலரே. அந்தச் சிலர் எந்தக் காலத்திலும் கலகம் செய்வதே இல்லை. சமய வேறுபாடும் அவர்கள் வாழ்வுக்கும் அறிவுக்கும் தோன்றுவதே இல்லை. எங்

கும் உண்மை இருப்பதாக அவர்கள் எடுத்துச் சொல்கின்றார்கள்; எல்லோரிடமும் அன்பாக அவர்கள் பழகுகின்றார்கள். சமய உண்மைகளை உணராதவர்களே பிணக்கும் பூசலும் வளர்க்கின்றார்கள்.

நீ சொல்கிறபடி ஆராய்ந்து பார்த்தால், கலகம் செய்கின்ற யாருக்கும் மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமே இல்லை. ஆனால் செல்வமும் செல்வாக்கும் தேடிக்கொள்ள வேண்டும் என்ற போட்டிப் பூசல்தான் இது. நாட்டின் செல்வத்தையும் செல்வாக்கையும் பங்கிட்டுப் பிரித்துக்கொள்வதில் மக்களுக்கு உள்ள ஆசை என்றுதான் இதைச் சொல்ல வேண்டும்.

ஆசை என்றும் ஏன் சொல்லவேண்டும்? கடமை என்றும் சொல்லலாம்போல் தோன்றுகின்றது. பொருள் தேடும் போட்டிக்கு இடம் கொடுத்து, அதை மேன்மேலும் தூண்டிவருகின்ற உலக அமைப்பில் அதைக் கடமை என்று சொல்வதும் பொருத்தமாகத் தோன்றலாம். தந்தையும் நீயும் அமைதியாக இருந்து பாட்டனாரின் செல்வத்தைப் பங்கிட்டுக் கொள்ள வில்லையா? அது கடமை என்றுதானே எண்ணிச் செய்தீர்கள்? ஆனால், சிற்றப்பா கவலை கொண்டு, நம்பிக்கையிழந்து கலகம் செய்தார். அவருடைய ஏக்கம் அவ்வாறு ஆத்திரப்படச் செய்தது.

நான் நேற்றுமாலை மண்ணடித் தெருவுக்குப் போய்த் திரும்பிவந்தபோது கண்ட ஒவ்வொரு காட்சியிலும் உன் கடிதமே நினைவுக்கு வந்தது. இரும்புப் பெட்டிக் கடைகளை வழியில் பார்த்தேன். வாங்குகின்றவர்கள் யார் என்று எண்ணினேன். "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற உண்மையைத் தெரிந்துகொண்டவர்கள் அவர்கள். திருடரின் கையில்

அகப்படாதபடி தங்கள் செல்வத்தை இரும்புப் பெட்டிக்குள்ளே வைத்துக் காக்க விரும்புகின்றவர்கள் அவர்கள். பூட்டுக் கடைகளைப் பார்த்தேன். மாகாணங்களைத் தனித்தனியே பிரித்துக்கொண்டு தற்காப்புத் தேடிக்கொள்ளச் சில இனங்கள் பாடுபடுகின்றன. தனி மக்கள் இந்தப் பூட்டுக்களையும் அந்த நோக்கத்தோடுதான் வாங்குகின்றார்கள். பிராட்வே வழியாக வந்தபோது சில கடைகளுக்கு அமைந்திருந்த உறுதியான இரும்புக் கதவுகளைப் பார்த்தபோதும் இந்த நினைவே வந்தது. சைனுபசாரைக் கடந்து கோட்டையை நோக்கி நடந்தபோது சில உயர்ந்த வன்மையான கட்டிடங்களைக் கண்டேன். நீ சென்ற ஆண்டில் வந்தபோது உனக்கு அவைகளைக் காட்டினேன். நினைவு இருக்கும் என்று நம்புகின்றேன். அந்த நிதிநிலையக் கட்டிடங்களையும் அவற்றின் உறுதியையும் எண்ணியபோதும் உன் கடிதமே நினைவுக்கு வந்தது. செல்வத்தைத் தேடிக் காத்துக்கொள்வதில் உள்ள ஆசையை அவை காட்டுகின்றன. "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பதை அடிப்படையாகக்கொண்டு, பிறர் மேல் நம்பிக்கை இல்லாமல், தனி மனிதர் இரும்புப்பெட்டியைத் தேடுகின்றார்; தனி வீட்டார் பூட்டை நாடுகிறார்; வியாபாரக் கம்பெனியார் உறுதியான இரும்புக்கதவை அமைக்கின்றனர்; நிதிநிலையத்தார் வன்மையான கட்டிடங்கள் எழுப்புகின்றனர். இவர்களின் முயற்சிகளுக்ெல்லாம் அடிப்படையில், தற்காப்பும் பிறர்மேல் நம்பிக்கை இன்மையும் காணலாம். இந்த அடிப்படைகளைக் கொண்டே — தம் இனத்தின் ஆக்கமும் பிற இனத்தார்மேல் நம்பிக்கை இன்மையும் காரணமாகக் கொண்டே — இனங்கள் சண்டை இடுகின்றன.

பெட்டியும் பூட்டும் கதவும் கட்டிடமும் நாடுவது போலவே அரசியல் அமைப்பை நாடுகின்றன. முன் சொன்ன நான்குக்கும் இடம் கொடுத்த உலகம் ஐந்தாவதையும் காண்கின்றது. வேறு வழி உண்டா? "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை", என்று திருவள்ளுவர் எழுதியபோது தனி மனிதரையும் குடும்பத்தாரையும் எண்ணியிருக்கலாம். ஆனால், இப்படி மக்கள் பலவாறு பிரிந்து போரிட்டு நாட்டைக் குழப்புவதை எண்ணியிருப்பாரோ?

அம்மா! உண்மைக் காரணம் விளங்கிவிட்டதே தவிர, இனி என்ன வழி என்று தெளிவாகவில்லை. பழக்க வழக்கங்களை ஒன்றுபடுத்தினால் ஒற்றுமை ஏற்படும் என்று இன்று காலையில் எனக்குத் தோன்றியது. கடிதம் எழுதும்போதுதான் அந்த வழியிலும் குறை இருப்பது தெரிந்தது. பழக்க வழக்கங்களை ஒன்றுபடுத்துவதற்கு வழி என்ன? அதற்கு உரிய வழி தெரியவில்லையே. பெரிய தலைவர்கள் இது வரையில் செய்ய முடியாததை நாம் இன்று செய்து விட முடியுமா? ஒன்றுபட்டால் வாழலாம் என்ற நம்பிக்கை ஒன்றே இருந்த அந்தக் காலத்தில் செய்ய முடியாததைப் பிரிவுபட்டால்தான் வாழலாம் என்ற உணர்ச்சியும் தலையெடுத்துள்ள இன்று செய்ய முடியுமா?

மன்னிக்க வேண்டும்; எனக்கு ஒரு துணிச்சலான எண்ணம் தோன்றுகின்றது. அந்தத் திருக்குறளை மாற்றி அமைத்தால்—மாற்றி எண்ணும் காலம் வந்தால்—? அப்போது எதுவும் செய்ய முடியும் அல்லவா?

அதாவது "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று இருப்பதால்தானே பெட்டி, பூட்டு, கதவு, கட்டிடம் என்பன வளர்ந்து இனங்களின் ஆட்சிப்

பொறுப்புவரையில் பொருள் தேடும் போட்டி பெருகி யுள்ளது. இத்தனை குற்றங்களுக்கும் ஒரே கழுவாய் என் கனவில் தோன்றுகின்றது.

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்னும் நிலைமை போக வேண்டும். பொருள் பற்றிய பூசல் உலக அமைப்பில் இருக்கக்கூடாது. "பொருளில்லார் இவ்வுலகில் இல்லை" என்று மாறிய நிலைமை வந்துவிடவேண்டும். அப்போது அந்தத் தொல்லைகளுக்கு இடம் உண்டா?

எல்லாக் கட்சிகளும் எல்லா அறிஞர்களும் சேர்ந்து இதற்காகப் பாடுபடக்கூடாதா? இதிலும் ஒருவர்மேல் ஒருவர்க்கு நம்பிக்கை இல்லையா? மதச் சண்டை, இனச்சண்டை என்று சொல்லி மூட நம்பிக்கையையும் வீண் வெறியையும் வளர்ப்பதை விட, நாட்டை விட்டு வறுமையைத் துரத்துமாறு ஆக்க வேலையைச் செய்யக்கூடாதா?

அன்புள்ள மகன்,

எழில்

# 4

அன்புள்ள அம்மா,

உன் கட்டளைப்படியே இதுவரையில் நடந்தேன். இன்று நடக்க முடியவில்லை.

" தமிழர்கள் உணர்ச்சி அளவில் ஊக்கம் மிகுந்தவர்கள் ; வாய்ச்சொல் அளவில் வீரம் மிகுந்தவர்கள் ; இந்த இரண்டும் மட்டும் பெற்றவர்களால் ஒரு நாடு முன்னேற்றம் அடைய முடியாது. கடமை ஒழுங்கு ஒன்று வேண்டும். இந்த ஒன்றுமட்டும் இருந்து, மற்ற இரண்டும் இல்லாதிருந்தாலும் கவலையில்லாமல் தமிழ் நாடு எப்போதோ தலையெடுத்திருக்கும். நீ ஒரு தமிழன்; பழங்காலப் பிற்போக்குத் தமிழனாக இருந்து. வாயால் மட்டும் விளங்காதே, உணர்வால் மட்டும் உயராதே, செயலாலே சீர்படு " என்று எனக்கு எழுதிய கடிதத்தை மறந்துவிடவில்லை. என் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து முற்போக்குத் தமிழன்தான் என்பதைக் காட்டப் போகிறேன். பாடங்களை நன்றாகக் கற்று முதல் வகுப்பில் தேறப்போகிறேன். ஆனாலும் நேற்றுவரையில் அமைதியாக இருந்ததுபோல், இன்று இருக்கமுடியவில்லை. ஆகையால்தான் சில திங்கள் கழித்து இதுபோல் கடிதம் எழுதுகிறேன்.

அம்மா ! நான் எப்படி இன்று அமைதியாக இருக்க முடியும் ? உலகமே அழுகின்றதே ! நான் மட்டும் புத்தக உலகத்தில் என்னை மறக்க முடியுமா ?

உலகம் கண்ணீர் விடுகின்றது ; ஒரு வீடு, ஒரு நகரம், ஒரு நாடு கலங்கவில்லை ; உலகம் கலங்கி உருகுகின்றது. வீடுதோறும் இழவு, நகரந்தோறும் சாக்

காடு நேர்ந்தது போல் இருக்கின்றதே ! ஒவ்வொருவர் முகமும் வாடிச் சுருங்கிவிட்டதே !

அம்மா, இமயமலை தலைகீழாய்ப் புரண்டிருந்தாலும், இவ்வளவு பெரிய அதிர்ச்சி உண்டாயிருக்காது. பூகம்பம் உண்டானாலும், ஒவ்வொரு பகுதிதான் நடுங்கும். ஆனால் உலகத்தார் உள்ளமெல்லாம் அதிரும் அதிர்ச்சி இந்திய நாட்டிலே டில்லியிலே நடந்துவிட்டதே !

வாழ்ந்த நாளிலும் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொரு வகை மாறுதலை ஏற்படுத்தும் ஆற்றல் அந்தத் தூய மெல்லிய உடலுக்கு இருந்தது. உணர்வற்று வீழ்ந்த நாளிலும் எல்லோரையும் ஒருசேரக் கலங்கவைக்கும் ஆற்றல் அந்த நல்லுடலுக்கு இருந்ததே !

புத்தர் வாழ்ந்தார் ; அவர் வாழ்நாளில் லட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கையைத் திருத்த முடிந்தது. சாக்ரடிஸ் வாழ்ந்தார் ; அவருடைய வாழ்நாளில் பதினாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை விளைக்க முடிந்தது. ஏசுநாதரும் அவ்வாறே. ஆனால், வாழ்நாளிலேயே கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கினவர் யார் அம்மா ? காந்தியடிகள். இந்தப் பெயரையும் நினைத்து, தம் மனத்தையும் தொட்டுப் பார்க்கட்டும் ! அவருடைய பகைவரும் அவரிடமிருந்து கற்று வளர்ந்த புதிய முறைகள் சில உண்டு என்பதை உணர்ந்து கொள்வார்களே !

எல்லோரும் அரசியல் காந்தியை அறிவார்கள். அரசியலில் அவர் பெருந்தலைவர் என்பதே பெரும்பாலோருக்குத் தெரிந்தது. ஆனால், இது முழு உண்மை அல்ல ; ஓரளவுதான் உண்மை. இன்னும் எண்ணிப்

பார்த்தால், அவருடைய அரசியல் கொள்கையில் கருத்து வேறுபட்டவர்கள் எங்கும் இருக்கின்றார்கள். அவருடைய அரசியல் கொள்கைகளுக்குச் செல்வாக்கு இருந்தாலும் உடன்படாமல் புறக்கணித்த தலைவர்களும் உண்டு; அறிஞர்களும் உண்டு; தொண்டர்களும் உண்டு.

ஆனாலும், அவருடைய அரசியல் நெறியே இன்று வரையில் பெற்றுள்ள வெற்றிக்கெல்லாம் காரணம். அவருடைய அறிவுரையே இன்று பல தலைவர்கள் உயர்வுக்குக் காரணம்; பல அறிஞர்கள் பெருமைக்குக் காரணம்; இந்தியாவின் தலைநிமிர்ந்த வாழ்வுக்குக் காரணம்.

அம்மா, மறக்க முடியவில்லை. நம் வீட்டில் நாம் பலநாள் காந்தியடிகளின் கொள்கைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த நாட்களை மறக்கமுடியவில்லை. அரசியலில் அவர் சொல்வதில் இதுமட்டும் சரி, அது சரியல்ல என்று வாதாடினோம். ஆனால், ஒவ்வொரு நாளும் அவருடைய தொண்டு வாழ்வையோ, இயற்கை நெறியையோ, சமயக்கொள்கையையோ, அற ஒழுக்கத்தையோ, கடமை ஒழுங்கையோ முடிவில் குறிப்பிட்டு அங்கே ஒப்பற்ற நிலையை வணக்கத்தோடு போற்றி அடக்கத்தோடு அமைதியடையவில்லையா? அவரைவிடப் பெரிய அரசியல் அறிஞர்கள் இருக்கலாம். ஆனால், அவர் வாழ்ந்த வாழ்வைவிடச் சிறந்த வாழ்வை - தூய வாழ்வைக் குறிப்பிட வாய் இல்லாமல் அடங்கிவிட்டோம் அல்லவா?

" உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன் " என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு தமிழன் எழுதிவிட்டுச் சென்றான். இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக அந்த

ஒரு குறளுக்கு எடுத்துக்காட்டு இல்லாமலிருந்தது. காந்தியடிகளின் வாழ்வுதான் ஒரே எடுத்துக்காட்டாக நின்றது. அன்று திருவள்ளுவர் உண்மையின் பெருமையினை உணர்ந்து உணர்வுலகத்தில் நின்று எழுதினார். எழுதிய அவரைப் பற்றியே தமிழகத்தில் பலருக்குத் தெரியாது. ஆனால், அவர் உணர்ந்து எழுதிய கற்பனை அது. அந்த உண்மை கற்பனையாகவே நிற்கவில்லை ; ஓர் அரிய வாழ்வாக மலர்ந்தது. அந்த மலர் வாடியது ; சாம்பலானது. மதவெறியின் போர்வை போர்த்த அரசியல் வெறி அந்த அருமை மலரைக் கசக்கி எறிந்தது.

அந்த ஒரு குறள் மட்டும் என்ன ? திருவள்ளுவரின் அறத்துப்பாலில் உள்ள ஒவ்வோர் எழுத்திற்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்த வாழ்க்கை அல்லவா அது ?

எத்தனையோ நம்பிக்கைகள் எவ்வெவ்வாறோ தடுமாறும் நாட்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் வருகின்றன. ஆனால், அறம் என்ற ஒன்று உலகத்தை ஆளும் சட்டமாக இருக்கிறது என்பதை என்றும் தளரா நம்பிக்கையாகக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கை அன்று மாலை அடங்கிய அந்தப் பெருவாழ்வு !

இன்னொன்றும் இந்த நேரத்தில் எனக்குத் தோன்றுகிறது. அடிகள் பெரியவர், ஒப்பற்ற தலைவர் என்பதை உலகமெல்லாம் உணர்ந்துவிட்டது உண்மைதான். ஆனால் அவருடைய கொள்கைகளின் பெருமையை உணர்ந்தவர்கள் எத்தனைபேர் அம்மா ? அரசியலில் மட்டுமே அவர் இன்னவர் என்பதைப் பொதுமக்கள் உணர முடிந்திருக்கலாம். இயற்கை, அறம், எளிமை, கடமை, ஒழுங்கு முதலியவற்றில் அந்த ஞாயிறு வீசிய ஒளியால் பயனடைந்தவர்கள் மிக மிகச் சிலரே என்று எண்ணுகிறேன். அப்பா ஒரு நாள் கூறியதுபோல், காந்தியடிகளின் உயர்ந்த

KARAIKUDI

கொள்கைகள் பொதுமக்கள் அறிவுக்கு எட்டாதவைகளே. பசியில்லாமல் உணவுவிடுதிக்குச் சென்று உண்பதுபோல், கலையுணர்வு இல்லாமல் சினிமாவுக்குச் சென்று காண்பதுபோல், அன்பு இல்லாமல் திருமணத்திற்குச் சென்று ஆரவாரம் செய்வதுபோல், நாகரிகத்தின் பெயரால் கொள்கைகளை உணராமல் வாயால் புகழும் மக்கள் மிகுதியாக இருக்கின்றார்கள். அதனால்தான், அந்தத் தூய உடல் வாடிய அன்று இரவே, கொலையும் கொள்ளையும் தீயிடலும் துன்புறுத்தலும் தொடங்கச் சிலர்க்கு மனம் வந்தது. ஆனாலும் அவர்களும் துயரக்கோலத்தோடு கண்ணீர் வடித்தார்கள் என்பதைக் கேட்கும்போது, அந்தக் கொடுமைகளுக்கு அவர்கள் காரணம் அல்ல, நெடுங்காலமாக நிலவிவரும் வெறியே காரணம் என்று தெரிகின்றது.

அம்மா! என்னென்னவோ நினைவுக்கு வருகின்றன. தென்னாப்பிரிக்காவில் அவர் தொடங்கிய இயக்கத்திற்குத் தமிழ் மக்கள் துணையாக நின்று அவருடைய அன்பைப் பெற்றார்கள். 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்னும் பழமொழியாலும் திருக்குறள் கருத்துக்களாலும் தமிழ் மொழி அவருடைய போற்றுதலைப் பெற்றது. தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாதபோது அவரே தமிழாசிரியராக இருந்து தொண்டு செய்ததும் நினைவுக்கு வருகின்றது. இன்னொன்றை நினைக்கும்போது நெஞ்சம் நெக்குருகுகின்றது. தமிழர்களின் பண்பாடும், தமிழ் மொழியின் கருத்து வளமும் அவர் மனத்தைக் கவர்ந்தது போலவே, தமிழ் நாட்டு வறுமையும் அவருடைய கோலத்தையே மாற்றிவிட்டதே. சேலத்திற்குத் தெற்கே தமிழ் மக்கள் ஆண்களும், பெண்களும் - அரை நிர்வாணமாய் முழங்கால் வரையில்

அரையாடை உடுத்து உழைப்பதைக் கண்ணால் கண்ட அன்றுதானே, அடிகளின் தலைப்பாகையும் அகன்றது! நீண்ட அங்கியும் அகன்றது! பத்துமுழ வேட்டியும் அகன்றது! இவர்களுக்கு மானத்தை மறைக்கவும் கந்தல் போதவில்லை என்று கசிந்துருகித் தமிழ்நாட்டுக் குடியானவன் கோலத்தை அல்லவா அன்றுமுதல் மேற்கொண்டார்! அந்தக் கோலம்தானே உலகம் புகழ்ந்து வணங்கிய வறுமைத் திருக்கோலம்!

அம்மா! ஏதோ எழுதினேன், ஆறுதல் பெற.

அன்புள்ள மகன்,

எழில்

# 5

அன்புள்ள அம்மா,

மதவெறி போர்த்த அரசியல் வெறியே அடிகளைச் சுட்டது என்று நேற்று வரையில் உண்மையாகவே எண்ணியிருந்தேன். ஆனால் உன் கடிதம் கண்டதும் என் கருத்தெல்லாம் கலங்கியது. 'மதம், வெறி-இந்த இரண்டும் சேர்த்துச் சொல்லத் தகாதவை. மதவெறி என்று சொல்வது அமைதியான ஆத்திரம் என்பதுபோன்றது. மதம் என்பது கடவுள் பற்றிய கொள்கை. அந்தக் கொள்கைக்கும் வெறிக்கும் பெருந் தொலைவு. கொள்கை அழிந்தால்தான் வெறி பிறக்கும்' என்ற சொற்களை என் நண்பர்களுக்குப் படித்துக் காட்டினேன். அவர்களில் பலர் உடன்படுகின்றார்கள். வெறி கொண்டவன் கொள்கையை உணராதவன் என்பதை அவர்கள் நம்புகின்றார்கள்.

இப்போது எண்ணிப்பார்க்கின்றேன். புத்தர் பெருமானின் பெயரைச் சொல்லிக்கொண்டு கொடுமையை வளர்ப்பவர்கள் இல்லையா? கிறிஸ்து பெருமானின் பெயரைச் சொல்லிக்கொண்டு அணுக்குண்டுகள் செய்பவர்கள் இல்லையா? காந்தியடிகளின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஆடம்பரமான சடங்குகளும் கள்ள வாணிகமும் செய்பவர்கள் இல்லையா? அவர்களை எல்லாம் பௌத்தர்கள் என்றும், கிறிஸ்தவர்கள் என்றும், காந்தியன்பர்கள் என்றும் சொல்வது நம் குற்றம் அல்லவா? அதேபோல், கடவுள் எல்லாருக்கும் பொதுத் தந்தை, எல்லாரிடத்திலும் உள்ளவர் என்பதை எள்ளளவும் நம்பாமல், கடவுளின் பெயரைச்

சொல்லிக் கத்தியை உருவித் திரிகின்றவர்களையும் நெஞ்சில் வஞ்சம் வளர்த்துத் திரிகின்றவர்களையும் மதவாதிகள் என்றும் ஆத்திகர் என்றும் சொல்வது குற்றம்தான். அவர்களை மதவெறியர் என்று சொல்லாமல் வெறியர் என்று சொல்லவேண்டும் ; ஆத்திகர் என்று சொல்லாமல் நாத்திகர் என்று சொல்லவேண்டும். இன்னும் ஆராய்ந்து பார்த்தால் நாத்திகர் என்று சொல்லவும் தயங்க வேண்டும். ஏன் என்றால் எல்லோரும் நினைத்தவுடன் கடவுள் இல்லை என்று கண் மூடிச் சொல்லிவிடுவதால் நாத்திகராக முடியாது. நாத்திகர்க்கு ஆராய்ச்சி வேண்டும் ; கடவுள் இல்லை என்ற தெளிவு வேண்டும் ; இயற்கை என்றோ, பெர்னார்ட்ஷா போல் உயிராற்றல் என்றோ ஒன்றை நம்பும் நம்பிக்கையாவது வேண்டும். ஆகையால் இவர்கள் நாத்திகர் என்று சொல்லப் படுவதற்கும் தகுதியற்றவர்கள் ; வெறியர்கள் என்பதே பொருந்தும்.

இப்படிப் பார்த்தால், யாரை இந்துக்கள் என்று சொல்வது ? யாரை முஸ்லீம்கள் என்று சொல்வது ? யாரைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்வது ? மதக் கொள்கைகளை உணர்ந்தவர்களையா ? ஏதோ சில பழக்க வழக்கங்களை வைத்துக்கொண்டு, சில சடங்குகளைச் செய்துகொண்டு பெயரைமட்டும் சொல்லித் திரிகின்றவர்களையா ? கொள்கைகளை உணர்ந்தவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் நூறு இருநூறு பேர்தான் இருக்க முடியும். அவர்களைமட்டுமே இந்து முஸ்லீம் கிறிஸ்தவர் என்று குறிப்பது தகும். இவர்களுக்கோ மதவேற்றுமையே தெரியாது. இவர்கள் எங்கோ ஒரு மூலையில் உண்மைவாழ்வை நடத்திக்கொண்டு அமைதியாக இருக்கின்றார்கள். மற்றவர்கள் கோடிக்கணக்காக இருக்கின்றார்களே; அவர்களால்தான் வன்பும் துன்பும்

வழக்கும் குழப்பமும் கலகமும் கொடுமையும் வளர்கின்றன.

இந்தப் பொதுமக்களுக்கும் மதம் என்னும் கடவுள் நெறிக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்று சமயத்தலைவர்கள் உணரவும் உணர்த்தவும் தொடங்கிவிட்டால், நாட்டின் அல்லலுக்கு உண்மை மருந்து தேடமுடியும். அல்லது, பொதுமக்களாவது, கொஞ்சம் பொறுமையோடு எண்ணி, எந்தக் கடவுளைக் காப்பாற்றுவதற்காக இப்படிக் கத்தி உருவுகின்றோம் என்றும், எந்த நெறியைத் தூய்மைப் படுத்துவதற்காக இப்படிக் கொலையிலும் கொடுமையிலும் இறங்குகின்றோம் என்றும் எண்ணிப் பார்க்கக் கூடாதா? அவர்கள் என்ன செய்வார்கள், பாவம்! சில தந்திரமான மூளைகள் தங்கள் தன்னலமே கருதி, தங்கள் பதவி வேட்டையே கருதி, இருக்கின்ற வேறுபாட்டை வளர்த்து மதத்தின் பெயரால் வெறியூட்டுகின்றார்கள்.

“அருமை மக்களே! நம்முடன் வாழும் இன்ன மதத்தாரே நம் வாழ்வுக்கு முட்டுக்கட்டையாக நிற்கிறார்கள். அவர்கள் பொல்லாதவர்கள். நம்முடைய மதத்தை அவர்கள் பழிக்கின்றார்கள்; நம்முடைய கடவுளை அவர்கள் இகழ்கின்றார்கள். நம்முடைய பழக்க வழக்கங்களை அவர்கள் தூற்றுகின்றார்கள்” என்றெல்லாம் பலவகையாகத் திரித்துச் சொல்லிப் பொதுமக்களின் மனத்தில் வெறியைத் தூண்டிவிடுகின்றார்கள். பொதுமக்களோ வாழ்க்கையில் பலவகையிலும் குறைக்கும் கவலைக்கும் துன்பத்திற்கும் ஆளாகியிருக்கின்றார்கள். அவர்களின் மனத்தில் பகையும் வெறியும் வளர்ந்த பிறகு, பிற மதத்தார் ஒழிந்தால் தான் வயிறாரக் கஞ்சி குடிக்க முடியும், கவலையற்று வாழ்க்கை நடத்த முடியும், பழங்காலம் போல் நம்

மதத்தின் பெருமையும் கடவுளின் பெருமையும் ஓங்கும் என்றெல்லாம் பொருளாதார முன்னேற்றத்தையும் மற்றொன்றையும் சேர்த்துக் குழப்பிக்கொண்டு, கத்தியை உருவிக்கொண்டு வெளியே புறப்படுகின்றார்கள் யார் யாரோ விளைத்த வினையெல்லாம் சேர்ந்து, உலகத் தலைவர் காந்தியடிகளின் உழைப்பையெல்லாம் கொண்டது; இறுதியில் உயிரையும் கொண்டது. இனியாவது மக்களிடையே ஒற்றுமையான, வெறி யற்ற அமைதியான வாழ்க்கை ஏற்படுமா?

நானும் எண்ணி எண்ணிப் பார்த்தேன். அம்மா! எப்படி ஏற்படும்? உண்மையை வெளிப்படையாகச் சொன்னால்தான் ஏற்பட முடியும். பிரிவினையாகாத பெரிய குடும்பத்தில் அண்ணன் தம்பிமார் அன்றாடம் போராடிக்கொண்டு குடும்பத்தைக் கலகலக்கச் செய்கின்றார்கள். 'அண்ணன் பொல்லாதவன், அவன் தொலைகின்ற வரைக்கும் என்னால் ஒத்துழைக்க முடியாது' என்று ஒரு தம்பி சொல்கிறான். 'இந்தத் தம்பி வஞ்சகன், என்னைப் பற்றி என்னென்னவோ சொல்லித் தூற்றுகின்றான், இவனாவது குடும்பத்தை விட்டு வெளியேற வேண்டும், அல்லது நானாவது ஒழிந்துபோகிறேன்' என்று இன்னொருவன் முறையிடுகின்றான். இப்படிப்பட்ட குடும்பத்தில் புகுந்து, "அண்ணன் பொல்லாதவனல்ல, தம்பியும் வஞ்சகன் அல்ல, இருவரும் ஒரு வயிற்றில் பிறந்தவர்கள், அப்படி இருக்கும்போது, வேறு வேறு குணம் எப்படி இருக்க முடியும்? அதை நம்ப வேண்டாம். இருவரும் நல்லவர்கள், நான் சொல்லுகிறேன், நம்புங்கள். நீ வேறு அல்ல, அவன் வேறு அல்ல; இருவரும் ஒருவரே. சான்று வேண்டுமானால் இந்த நூலில் இத்தனையாவது பக்கத்தைப் படித்துத் தெரிந்துகொள்ளுங்கள்" என்று

கோடிமுறை எடுத்தெடுத்துச் சொன்னாலும் பயன் உண்டா? அதைவிட, அந்தக் குடும்பத்தின் உண்மையான போராட்டத்திற்குக் காரணம் பொருளாதார நிலையே என்பதையும், ஒருவன் சிறிது உழைப்பால் பெருநன்மை அடைகின்றான் என்பதையும், மற்றொருவன் பெரும்பங்கு உழைத்தும் சிறு நன்மையே பெறுகின்றான் என்பதையும் தெளிவாக உணர்ந்து, ஒளிப்பு மறைப்பு இல்லாமல் அதை எடுத்துச் சொல்லி, உழைப்பையும் நன்மையையும் பங்கிட்டுத் தக்க ஏற்பாடு செய்தால் தொல்லையெல்லாம் ஒழியுமே!

நூற்றுக்குத் தொண்ணூறு குடும்பங்களில் கணவன் மனைவி ஒற்றுமையில்லாத குறையெல்லாம் காதல் இல்லாத குறையா? காசு இல்லாத குறையா? காதலின் அடிப்படையில் வாழ்க்கை தொடங்கிய நல்ல இளைஞர் பலர் பொல்லாத முறிவுகளுக்கு ஆளாவதை நாம் பார்க்கவில்லையா? காதலே கனவிலும் இல்லாத பணக்காரக் குடும்பங்களில் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அடிக்காமல், அழிக்காமல், பகைக்காமல், பழிக்காமல், தம் தம் விருப்பம்போல் வாழ்ந்து வெளியார் கண்ணுக்கு அமைதி தோன்ற நாளைக் கழிக்கவில்லையா? காதல் இருந்தும், பண்பாடு இருந்தும், மானம் இருந்தும், பொறுமை இருந்தும், பல குடும்பங்களில் ஒற்றுமை அற்ற இல்லற வாழ்க்கையைப் பார்க்கவில்லையா? இந்தக் குடும்பங்களில் உள்ள கணவன்மாருக்கும் மனைவிமாருக்கும் நாள்தோறும் அன்பு வாழ்க்கையின் பெருமையை எடுத்தெடுத்துச் சொல்லியும் பயன் உண்டா? அகநானூற்றையோ நற்றிணையையோ குறுந்தொகையையோ உணர்ந்து உணர்ந்து ஓதினாலும் பயன் உண்டா? இவர்களின் குறைகளை வேறு வேறு பெயரால் சொல்லலாம்; அவன் ஆத்திரக்

காரன், இவள் சிடுமூஞ்சி, அவன் ஒழுக்கம் கெட்டவன், இவள் மதிப்பு இல்லாதவள், அவன் இரக்கமற்றவன், இவள் அறிவு இல்லாதவள் என்று ஆயிரம் குறைகளைச் சொல்லலாம். இவைகள் எல்லாம் நோய் நாடுதல் என்று திருவள்ளுவர் சொன்ன நிலைதான். நோய் முதல் நாடுதல் அல்ல. அவர் சொன்னதுபோல், நோயின் அடிப்படையையும் காணவேண்டாமா? அடிப்படை எப்படி எப்படி இருக்கும்? ஒரு குடும்பத்தில் நூல் சேலை நாலைந்து வேண்டுமே என்ற ஏக்கத்தால் போராட்டம் வேர் கொண்டு வளர்ந்திருக்கும். மற்றொரு குடும்பத்தில் பட்டுச் சேலை ஒன்றுகூட இல்லையே என்ற பெயரால் அது புறப்பட்டிருக்கும். இன்னொரு குடும்பத்தில் "அந்த வீட்டுக்கார அம்மாவிடம் இருப்பதுபோல் நான் இருபது பட்டுச் சேலையா கேட்கிறேன்? பத்துப் பட்டுச் சேலைதானே கேட்கிறேன்?" என்பதில் தொடங்கியிருக்கும். ஒரு குடும்பத்தில் "எத்தனை நாள் காதில் ஓலை போட்டுக்கொண்டு தெருவில் திரிவது? ஒரு சிவப்புக் கம்மல் வேண்டாமா?" என்று முளைத்திருக்கும். இன்னொரு குடும்பத்தில், "எல்லாரும் வெள்ளைக்கல் தோடு போடும்போது. நான் சிவப்புக்கல் தோடு போட்டுக்கொண்டு வெளியே போவதா?" என்று அரும்பியிருக்கும். மற்றொரு குடும்பத்தில், "எவ்வளவோ செலவு செய்கின்றீர்களே! ஒரு வைரக்கல் இழைத்த தோடு வாங்கிக் கொடுக்க மனம் வரவில்லையே" என்று மலர்ந்திருக்கும். மற்றொரு குடும்பத்தில், "உங்கள் மோட்டாரை நம்பினால் நேரத்தோடு கிளப்புக்குப் போக முடியவில்லை; எனக்குத் தனி மோட்டார் வேண்டும், தனி டிரைவரும் வேண்டும்" என்று காய்கொண்டிருக்கும்.

இந்த அடிப்படைகள் அமைந்த வாழ்க்கைக் குறைகளை எண்ணிப் பார்க்காமல், சீதையையும் தமயந்தியையும், கண்ணகியையும், மங்கையர்க்கரசியையும் எடுத்துக்காட்டாகக் கோடிமுறை சொன்னாலும் நோக்கம் நிறைவேறுமா? நோய்முதலை நாடாமல் நோய்க்கு மருந்து கொடுத்தால், காசும் பெயரும் பெற்று வைத்தியர் வீட்டுக்குத் திரும்பலாம் ; அதற்கு மேல் பயன் உண்டா ? எடுத்துச் சொல்லுகிறவர்களும் நல்லவர்கள், உத்தமர்கள் என்று பெயரெடுக்கலாமே தவிர, உலகத்திற்கு நன்மை விளையுமா ? ஆகவே, குடும்பங்களைத் திருத்த விரும்பினால், இந்தச் சமூக நிலையில் பொருளாதார ஏற்றத் தாழ்வு இப்படி இருக்கின்ற வரையில், எல்லாம் வெறும் பேச்சுத்தான்; ஏட்டளவுதான். அதனால், முதல் கடமை பொருமைக்கும் குறைக்கும் இடம் இல்லாதபடி எல்லோருக்கும் உழைப்பையும் பொதுவாக்கி ஊதியத்தையும் ஒழுங்காக்க வேண்டும் அல்லவா ?

இந்த உண்மையைச் சமுதாயத்திலும் உணர்ந்துவிட்டால், ஒரே நாளில் மதப்பிணக்கைத் தகர்த்து எறியலாமே ! யார் உணர்ந்து உணர்த்த வல்லவர்கள்? “ அருமை மக்களே ! உங்கள் மதம் ஒரு கொள்கை ! அவர்கள் மதமும் ஒரு கொள்கை. கொள்கைகளை யாரும் அழிக்கவோ கெடுக்கவோ முடியாது. காப்பது கடவுளின் பொறுப்பு. அவருடைய வேலையை நீங்கள் செய்துவிட முடியுமா ? செய்வதாக எண்ணுவது குற்றம் அல்லவா ? அந்த நெறியை உங்கள் மனத்தளவில் வைத்துப் போற்றி உண்மையாக நடப்பது கடமை. உங்கள் வாழ்க்கையில் நீங்கள் படும் துன்பங்களுக்கும் குறைகளுக்கும் காரணம், வேறு மதம் அல்ல ; வேறு நெறி அல்ல ; உங்கள் மனத்தைக்

கெடுக்கும் சிலருடைய வெறியே காரணம். அவர்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். நீங்கள் எண்ணிப் பாருங்கள். உங்கள் வயிறு நிரம்பவில்லை ; உங்கள் வீடு நிரம்பவில்லை ; உங்களுக்கு உடை போதவில்லை ; சிறுவர்களின் கல்விக்கு வாய்ப்பு இல்லை ; உடம்புக்கு வளர்ச்சி இல்லை ; வாழ்வுக்கு வழி இல்லை. இவ்வளவுக்கும் காரணம் மதங்கள் அல்ல. கட்சிகள் அல்ல. ஆனால் உங்கள் உழைப்பு உங்களுக்குப் பயன்படாதபடி தடுக்கும் தடைகள். உழைத்தவர்களுக்குப் பயன் கிட்டுவதில்லை ; உழைக்காதவர்களுக்குப் பயன் போய்ச் சேர்கின்றது ; இனிமேல் படிப்படியாக நன்மை செய்வோம். உங்கள் உழைப்பு இனிமேல் உங்களுக்கே பயன் தரும். யார்மேலும் பகை வேண்டாம். அமைப்பின் மேல் வெறுப்புக் கொள்ளுங்கள். அந்த அமைப்பை மாற்றி அமைக்கலாம் ; எங்களோடு சேர்ந்து ஒத்துழையுங்கள்" என்று நம்பிக்கை ஊட்டி எடுத்துச் சொல்வதே வழியாகும்.

இதைச் செய்வார் யார் ? அம்மா ! பொறுத்துப் பார்ப்போம். இதற்காக வாழ்ந்து இதற்காகவே பலியான ஒரு பெருந் தலைவர் தம் கையாலேயே எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார். அந்த மரண சாசனத்தைப் படித்து உருகும் மனங்களே இப்போது தேவை. "இப்போது பெற்றிருப்பது அரசியல் விடுதலையே. இனிப் பெறவேண்டிய உரிமைகள் பொருளாதார உரிமையும் சமூக உரிமையும் அற உரிமையும் ஆகும். அவற்றிற்காகப் பாடுபடுவதே இனி உள்ள கடமை" என்ற அடிகளின் அரிய கருத்தை மறை மொழியாக மதித்துச் செயலாற்ற முற்படுவார்களா ?

ஏ, இந்தியாவே! தந்தை இழந்த நாடே! மதம் வேறு, வெறி வேறு; உள்ள குறை வேறு, அதற்கு உரிய மருந்து வேறு. மருந்தைத் தேடி உண்டு நலம் பெறுவாயா? இனியும் மதி கெட்டு வெறி பிடித்து அலைவாயா?

வணக்கம், அம்மா.

அன்புள்ள மகன்,

எழில்

# 6

அன்புள்ள அம்மா,

எப்படியாவது வறுமை ஒழியவேண்டும் என்று நான் எழுதினேனே அல்லாமல், கிளர்ச்சி மூலமாகவா புரட்சி வாயிலாகவா என்று நான் ஒரு கருத்தையும் எழுதவில்லையே? ஆனாலும் நீ எழுதிய அறிவுரையை ஏற்றுக்கொண்டு நன்றி கூறுகின்றேன். "மற்ற நாட்டின் எடுத்துக்காட்டை வைத்துக்கொண்டு இந்த நாட்டிற்கும் அதே வழியை வகுக்க வேண்டியதில்லை. அது முப்பது ஆண்டுகளுக்கு முன் விஞ்ஞான முற்போக்கும் விழிப்பும் இல்லாத காலத்தில், தொன்று தொட்ட பண்பாடு இல்லாத நாட்டில், ஆள்வோரும் ஆளப்படுவோரும் அடியோடு மாறுபட்டிருந்த சூழலில் ஏற்பட்ட புரட்சி. அந்தக் காலம் போய் விட்டது. கருவிகளும் முறைகளும் மாறிவிட்டன. இது வேறு நாடு; சூழல் முற்றிலும் வேறு; ஆகையால் கண்மூடிப் பின்பற்றிய புரட்சிக் கொள்கைகளைப் பேசிப் பயனில்லை" என்று எழுதியவை ஒருவேளை அப்பா பக்கத்திலிருந்து சொல்லியபடி எழுதிய சொற்களோ? அல்லது உண்மையாகவே நீயே இவ்வாறு எழுதினாயா? அம்மா! எப்படி இருந்தாலும், இந்த அறிவுரையை ஏற்றுக்கொள்கிறேன்.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு உலகம் எவ்வளவோ மாறியிருக்கிறது என்பது உண்மைதான். நம் நாட்டின் பண்பாடும் வேறுதான்; பகைவர்க்கும் இரக்கம் காட்ட வேண்டும என்ற எண்ணம் அடிப்படையில் இருந்து வரும் நாடுதான். (ஆனால் அதற்கு

மாறுக, பழகினவர்களையே வதைக்க வேண்டும்; அடுத்தவர்களையே அழிக்க வேண்டும் ; உடனுள்ளவர்களையே ஒழிக்க வேண்டும் என்பதிலும் நம் நாடு பின் வாங்கவில்லை! எப்படியும் கொடுமைக்குக் கூசும் மனம் கொஞ்சம் உண்டு.) சூழலும் வேறுதான். மக்கள் பெரும்பாலோரின் வாக்குரிமையைப் பெற்ற தலைவர்களே ஆட்சி புரிகின்றார்கள். ஆகையால் மாறுதல் நிகழவேண்டும் என்று எழுதினேனே தவிர, ஓர் இயக்கத்தை நடத்தி அதன் மூலமாக மாறுதல் வர வேண்டும் என்று எழுதவில்லை. மாறுதல் வேண்டும் ; அவ்வளவுதான். வழியைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. சரிதானே, அம்மா!

இதோடு நான் நிறுத்திக்கொண்டாலும், என்னை வெறுங் கொள்கையாளன் என்றும், செயலாளன் அல்ல என்றும் இகழக் கூடும். ஆகையால் என் உள்ளத்தில் இருப்பதையும் வெளியிடுகிறேன். நீ எழுதியதுபோல் "இளைஞர் உள்ளங்களில் எண்ணங்கள் சும்மா இருப்பதில்லை. செயல் வடிவம் பெறவே விரும்புகின்றன." ஆனால், என் எண்ணங்கள் கொலையும் கொள்ளையும் கொடுமையும் மலிந்த இரத்தப் புரட்சியில் படியவில்லை. அப்படிப்பட்ட புரட்சிக்கு வித்தாகிவிடுமோ என்று அஞ்சித்தான் அப்பாவுக்குப் படித்துக் காட்டியிருப்பாய் என்று கருதுகிறேன். இந்த அச்சத்தால் அவர் சொன்ன சொற்களை அப்படியே கடிதத்தில் எழுதிவிட்டிருப்பாய். நான் இப்போது உறுதியாகச் சொல்கிறேன் ; இரத்தம் சிந்திக் கொடுமைகள் செய்யும் புரட்சியைப் பற்றி நான் கனவு காணவே இல்லை. ஒருவேளை அந்தப் புரட்சி தோன்றிவிட்டால் நீயும் அப்பாவும் நானும் சேர்ந்து வருந்துவோம். ஆகையால் அது வராமல் தடுப்பதற்கு

வழிகோல வேண்டாமா? ஏரி உடைத்துக்கொள்ளும், ஏரி உடைத்துக்கொள்ளும் என்று ஊரிலுள்ள இளைஞர் சிலர் சொல்லிவருகின்றார்கள். ஏரி உடைத்துக்கொண்டால் ஊர் அழியுமே என்று உங்களைப் போன்றவர்கள் அஞ்சுகின்றார்கள்; உடைத்துக்கொள்ளக் கூடாது என்று இறைவனையும் வேண்டுகின்றார்கள். ஆனால், அஞ்சுவதும் வேண்டுவதும் மட்டும் பயன் தருமா? திடீரென்று ஏரி உடைத்துக்கொண்டால் அது யார் தவறு? கரையைப் பழுதுபார்க்காமல் விட்ட தவறு யாருடையது? ஊர் அழியும், ஊர் அழியும் என்று அஞ்சி அஞ்சி நீங்கள் கடமையைச் செய்யாமல் காலம் கழித்த தவறுதானே? அந்தக் கடமைஉணர்ச்சி இல்லாமல், "ஏரி உடைத்துக்கொள்ளும்" என்று அஞ்சுவதால் பயனில்லை. ஏன் அம்மா இந்தப் பயம்? நாட்டின் உண்மைக் குறையை ஒத்துக்கொண்டு கடமையைச் செய்ய வேண்டாமா? சமூகத்தில் வறுமைத் தொல்லை அளவுமீறி மலிந்துவிட்டது. சமூகம் உடைந்துபோகும் நிலைமையில் கவலைக்கு இடமாக இருக்கின்றது. வயிற்றுக் கவலையும், பணவேட்டையும் எல்லோரையும் பிடித்து அலைக்கின்றன. அன்பையும் அறத்தையும் மெல்ல மறந்துவருகின்றார்கள். இந்த நோய்களைப் போக்காமல் அஞ்சி ஒதுங்குவதால், சமூகம் சீர்ப்பட்டு விடுமா? வயிற்றுக் கவலை, உடைக்கவலை, வீட்டுக்கவலை, கல்விக்கவலை, தொழில் கவலை முதலான கவலைகளை ஒழிப்பதற்குத் திட்டம் போட்டு, ஒவ்வொரு படியாக முன்னேற்றம் செய்து காட்டினால் நாட்டு மக்கள் நம்பிக்கை பெறுவார்கள்; ஒத்துழைப்பார்கள்; 'புரட்சி' என்று யாராவது பேசினாலும் 'பித்தம்' என்று எள்ளுவார்கள்.

அம்மா ! இன்றைக்கு நிலைமை நேர்மாருக இருப்பதை மறந்துவிடக் கூடாது. அப்படி மறப்பதுதான் பெரிய குற்றம் ; பழுதுபட்ட கரையைக் கண் திறந்து பார்க்காமல் ஏரியைப் புறக்கணிப்பது போன்ற பெரிய குற்றம்.

இன்று நிலைமை எப்படி இருக்கின்றது ? ஆக்க வேலையைப் பற்றி அமைதியாகப் பேசினல் கேட்க வருவோர் கூட்டம் குறைவு ; அழிவு வேலையைப் பற்றி ஆரவாரமாகப் பேசினல் பெருந்திரளாக மக்கள் கூடுகின்ருர்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் தொடங்குவது எளிதாக இருக்கின்றது. தொடங்கியதை முடிவு செய்து நிறுத்துவதோ அரிதாக இருக்கின்றது. செல்வர்களிடத்திலும் அதிகாரிகளிடத்திலும் குணம் ஏதாவது தப்பித் தவறி இருந்தால் அதைப் புகழ்கின்றவர்களைக் காணேம்; ஆனல் அவர்களுடைய குற்றங்களை எடுத்துத் தூற்றிப் பழிக்கின்றவர்களை எந்த மூலையிலும் காணலாம். பத்திரிகை வாங்கினல் எதைத் தேடிப் படிக்கின்ருர்கள் என்று பொதுவாக ஆராய்ந்தாலும் இந்த உண்மையை உணரலாம்.

இவ்வளவு உண்மையையும் மறைக்கலாமா ? அது முழுப் பூசனியைச் சோற்றில் மறைப்பதுபோல்தான். பொதுமக்கள் இந்த நிலைமையில் இருப்பதும் தவறுதான். அவர்களைப் புரட்சிக்காரர் தூண்டி விடுவதும் தவறுதான். ஆனல் புரட்சிக்காரர் ஏன் தூண்டுகின்ருர்கள் ? பொதுமக்கள் எளிதில் தம் தூண்டுதலுக்கு இரையாவார்கள் என்ற நம்பிக்கையால்தான். பொதுமக்கள் ஏன் அவர்களுடைய தூண்டுதலுக்கு இரையாகின்ருர்கள் ? பல நாளும் கவலைப்பட்டு வாழ்க்கையில் மெலிந்த காரணத்தால்தான். வயிற்றுக் கவலை முதல் வீட்டுக்கவலை, தொழில்கவலை வரையில் பெரும்

பாலோர் வருந்தி வருந்திச் சோர்ந்து சோர்ந்து அல்லல் படுவதால்தான் புரட்சிப் பேச்சுக்கு எளிதில் செவி கொடுக்கின்றார்கள். ஆகவே, முதல் குற்றம் – பெருங் குற்றம் – யாருடையது ? பொதுமக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தாமல் அவர்களுடைய முன்வினை என்று கொட்டாவி விட்டவர்களின் குற்றம் ; உலகம் இப்படித்தான் இருக்கும் என்று தம் தொப்பையை மட்டும் தடவிக் கொண்டு மேல்மாடியில் உலவியவர் களின் குற்றம் ; அறிவு இருந்தும் ஆற்றல் இருந்தும் தொண்டு செய்யாமல் தன்னலத்தோடு மூலையில் இருந் தவர்களின் குற்றம்.

அம்மா ! பொதுமக்களுக்கு நம்பிக்கையும் நல் லெண்ணமும் பிறக்கும்படியாக அவ்வளவு வேகத் தோடு நிலைமை முன்னேற வேண்டும். இதற்கு வெறும் பேச்சுப் போதாது ; பத்திரிகைத் தலையங்கம் போதாது ; கட்சிப் பிரசாரம் போதாது ; பெரியோர் போற்றுதலும் போதாது ; அறிஞர் அறிவுரையும் போதாது. துன்பத்தை ஒழிக்கும் ஒரு முயற்சிமட்டும் இருந்தால் அதுவே போதும்.

வயிற்றுக் கவலை, வீட்டுக் கவலை என்று பல வகைப் பெயர்களால் சொல்ல வேண்டாம், பணக் கவலை என்று ஒரு சொல்லால் குறிக்கலாம். இது குறைந்துவிடும் என்று பொதுமக்கள் நம்புகின்றார் களா ? இல்லை. உலகம் தலை கீழாக அமைந்திருக் கின்றதே ! உழைக்காத மக்கள் இன்பமாக வாழ் வதைப் பொதுமக்கள் கண்ணால் பார்க்கின்றார்கள். தாம் எவ்வளவோ உழைத்தும் வயிற்றுக் குறை, உடைக் குறை, கல்விக்குறை முதலான எல்லாக் குறையும் தமக்கே இருப்பதையும் பொதுமக்கள் உணர்கின்றார்கள். இந்த நிலைமை இருந்தால் பொது

மக்களுக்கு எப்படி நல்லெண்ணம் பிறக்கும்? இதைத் தான் நான் மாற்றவேண்டும் என்று சொல்கின்றேன்.

ஒன்று சொல்கின்றேன். உணவுப் பொருள்களை உழவர்கள் விளைக்கின்றார்கள். அவர்களுக்கு வேறு பொருள்கள் தேவை; இந்த இரண்டு பகுதியும் அவர்கள் வாழ்க்கையில் இருக்கின்றன. ஒன்று தொழில் பகுதி; மற்றொன்று வருவாய்ப் பகுதி. தொழில் செய்கின்றார்கள்; ஆகையால் வருவாய்க்கு உரிமை பெறுகின்றார்கள். ஆனால் அவர்கள் இன்று கவலை இல்லாமல் வாழ முடிகின்றதா? அவர்களின் வாழ்க்கை போல் சீரழிந்த வாழ்க்கையே இல்லையே!

மற்றொன்று: தொழிலாளிகள் பலவகைப் பொருள்களை உண்டாக்குகின்றார்கள்; உணவும் உடையும் வீடும் கல்வி முதலான வசதிகளும் கேட்கின்றார்கள். உழைக்கின்றார்கள்; அதனால் கேட்கின்றார்கள். அளவுக்கு மீறி உழைக்கின்றார்கள்; ஆனால் போதிய அளவாவது பெறுகின்றார்களா? அவர்களுடைய வாழ்க்கையில் எத்தனை குறைகள் இருக்கின்றன!

பாடுகின்றோம்; "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று முழங்குகின்றோம். ஆனால் உழவரையும் தொழிலாளரையும் நிந்தனை செய்கின்றோம்.

என்ன செய்யவேண்டும் என்ற பழைய கேள்வியை இப்போதும் என்னை நோக்கிக் கேட்கலாம். என் உள்ளத்தில் தோன்றியதை எழுதுகின்றேன். பழங் காலத்தில் பண்டமாற்று இருந்தது அல்லவா? அதே நிலைமை இப்போதும் வர வேண்டும். இதைக் கேட்டவுடனே என்னைக் கருநாடகம் என்றும் காந்திப் பித்தன் என்றும் தள்ளிவிட மாட்டீர்கள், என்று நம்புகிறேன். பண்டமாற்றுக் காலத்தில் ஆக்குவோர்

நுகர்வோர் ஆகிய இரு திறத்தாரும் ஒத்துழைத்தார்கள் அல்லவா? அதைத்தான் குறிக்கின்றேன். கடற்கரையில் உப்பை உண்டாக்கினான் ஒருவன். வயலில் நெல்லை விளைத்தான் மற்றொருவன். அவன் கொஞ்சம் உப்பைக் கொடுத்து நெல்லைப் பெற்றான். இவன் கொஞ்சம் நெல்லைக் கொடுத்து உப்பைப் பெற்றான். இதுதான் பண்டமாற்று முறை. இதில் ஆக்குவோர் நுகர்வோர் இருவரும் இருந்தார்களே தவிரப் பறிப்போர் இடையில் இல்லை. உப்பை எடுத்துக் கொண்டால், ஆக்குவோர் பரதவர்; நுகர்வோர் உழவர். நெல்லை எடுத்துக்கொண்டால், ஆக்குவோர் உழவர்; நுகர்வோர் பரதவர். ஆக்குவோரும் நுகர்வோரும் ஒத்தமுறையில் ஒத்துழைத்தார்கள். வாழ்க்கை ஓரளவு சீராக இருந்தது.

அன்று தனிவாழ்க்கை எளிதில் அமைந்திருந்தது. இன்று நாடு பெருகிப் பரந்து பொதுவாழ்க்கை மிகுந்துவிட்டது. ஆனால் அந்த அடிப்படை இன்னும் இருந்துவருகின்றது. உழவர்கள் தொழில் செய்து உணவுப் பொருளை விளைக்கும்போது ஆக்குவோராக இருக்கின்றார்கள்; உடை முதலியன தேடும்போது நுகர்வோராக இருக்கின்றார்கள். தொழிலாளிகள் மில்களில் வேலைசெய்து பொருள்களை உண்டாக்கும் போது ஆக்குவோராக இருக்கின்றார்கள்; உணவு முதலியன தேடும்போது நுகர்வோராக இருக்கின்றார்கள். இவர்களை ஒருவர்க்கொருவர் உதவியாக இருக்கும்படியாகச் செய்வதே முதல் கடமை. ஆனால் இன்று அப்படி இருக்கின்றதா? இல்லையே! ஆக்குவோருக்கு அல்லலைப் பெருக்கி, நுகர்வோர் வாழ வழி இல்லாமல் விட்டு, பறிப்போருக்குத் துணை செய்கின்றோம்: கிராமங்களில் விளையும் நெல் தொழி

லாளிக்கு வருவதற்குள் பறிப்பவர்களின் கையில் அகப்பட்டுக்கொண்டு விலை ஏறிவிடுகின்றது. தொழிலாளிகள் செய்து தருகின்ற உடை முதலியவை உழவர்களுக்கு வருவதற்குமுன் பறிப்பவர்களின் கையில் கிடந்து விலை உயர்கின்றது. இப்படி நடுவில் பறிப்போர் அட்டைகளாக இருந்து உறிஞ்சுவதால் உழவரும் அல்லல்படுகின்றார்கள். தொழிலாளிகளும் தொல்லைப்படுகின்றார்கள். ஆகவே முதலில் செய்ய வேண்டிய கடமை பறிப்போர்க்கு இடமில்லாமல் செய்து, பண்டமாற்றுப் போல் பொருள்களை வாங்கித் தரும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டும். போர் முதலிய அழிவு வேலைக்கும் அடக்குமுறை வேலைக்கும் ஆயிரம் நிலையங்களை நடத்துவதைவிட இந்த ஆக்க வேலைக்குப் பல நிலையங்களை ஏற்படுத்தி நடத்தல் நல்லது. இது உலகத்திற்குப் புதுமை. ஆகையால் மலைப்புத் தோன்றும். புதியது எதையும் பார்த்து உலகம் மருள்வது இயற்கை.

இதை நடத்துவதில் பெரிய எதிர்ப்பும் இருக்காது. இப்போது உள்ள கூட்டுறவுச் சங்கங்களையும் போர்க் காலத்தில் ஏற்பட்ட பங்கீட்டு நிலையங்களையும் ஒன்று சேர்த்த ஒரு நல்ல முறை இது. இவ்வாறு சொன்னவுடன் கூட்டுறவுச் சங்கங்கள் நன்றாக நடத்தவில்லையே என்றும், பங்கீட்டு நிலையங்கள் பயன்படவில்லையே என்றும் தடைகள் எழுப்பலாம். இப்போது கூட்டுறவுச் சங்கம் தலைதூக்காமல் வாடுவதற்குக் காரணம் பறிப்போர் செல்வாக்காக இருப்பதே. பங்கீட்டு நிலையங்களில் லஞ்சமும் ஊழலும் இருந்த காரணம் பறிப்போர் வியாபாரிகளாக இருந்து இடையூறு செய்ததே ஆகும். ஆகையால் ஊர்தோறும் புதிய முறையில் ஆக்குவோரிடமிருந்து பொருள்களை வாங்

கிச் சேர்க்கவும், நுகர்வோருக்குப் பங்கிட்டுத் தரவும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தும்போது, தனி வியாபாரம் மறைய வேண்டும். உழைப்பைக் கணக்குப் பார்த்துப் பொருள்களை ஆக்கவும், ஆட்களைக் கணக்குப் பார்த்துப் பொருள்களைப் பங்கிடவும் இந்தச் சங்கங்கள் பொறுப்பு ஏற்கவேண்டும். இதன் வாயிலாக வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிக்கலாம். பலருக்கும் வேலை தரலாம். இதற்குப் பொது மக்களின் எதிர்ப்பும் இருக்காது; செய்வதற்கு வேலையும் நுகர்வதற்குப் பொருள்களும் கிடைக்க வழி இருந்தால், அவர்கள் ஆர்வத்தோடு ஒத்துழைப்பார்கள்.

அம்மா! அரசாங்கம் வியாபாரம் நடத்துவதா என்று வியப்புடன் கேட்கலாம். அதுதான் மேற்கொள்ளத்தக்க தலையான கடமை என்று சொல்வேன். என் தெரியுமா? இன்று உழவர்களின் உழைப்பைப் பறித்துத் திணற வைப்பவர்கள் பெரிய வியாபாரிகள். தொழிலாளிகளின் உழைப்பையும் பறித்துப் பயனடைகின்றவர்கள் பெரிய வியாபாரிகள். நிலமுடையவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஆசையூட்டித் தன்னலம் வளர்ப்பவர்கள் பெரிய பெரிய வியாபாரிகள். இப்பாலும் அப்பாலும் இருந்துகொண்டு, லஞ்சங்களையும் ஊழல்களையும் வளர்த்துச் சட்டங்களை ஆட்டிவைத்து, வழக்கறிஞர்களைக் கையாள்களாக வைத்துக்கொண்டு, அரசாங்கத்தை அடிக்கடி திணற வைக்கின்றவர்கள் பெரிய பெரிய வியாபாரிகள். இந்த நான்கும் உண்மையா? பொய்யா? ஆகையால் கூட்டுறவுச் சங்கங்களை வளர்த்து ஆக்கவேலை செய்து பொதுமக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது முதல் கடமை அல்லவா? அதனால் பெரும்பான்மையான மக்கள் பயன் அடைவார்

-கள் அல்லவா? புரட்சியாளர்களின் வலையில் சிக்காமல் அவர்களைத் தடுத்துக் காக்க முடியும் அல்லவா?

இன்னும் குறை இருந்தால் எழுதவேண்டும் நானும் எண்ணிப் பார்த்துத் தூய்மை பெறுவேன் என் உள்ளத்தை விளக்க முயல்வேன்.

அன்புள்ள,
எழில்

# 7

அன்புள்ள அம்மா,

உன் கடிதம் கண்டதும் மகிழ்ச்சி அடைந்தேன். புரட்சியா கிளர்ச்சியா என்று கேட்டு முன் கடிதத்தில் என்னைக் கலங்கவைத்தாய். ஆனால் இந்தக் கடிதத்தில் என்னைவிடத் தீவிரமான எண்ணங்கள் உனக்கு இருப்பதைப் பார்த்ததும் எனக்கு இருந்த சோர்வு போய் ஊக்கம் மிகுந்துவிட்டது.

தாழ்ந்த தொழிலுக்கும் மிக உயர்ந்த தொழிலுக்கும் இப்போது இருக்கும் சம்பள வேற்றுமை மிகுதி என்றும், நூறு ரூபாய்க்கு மேல் வேற்றுமை இருக்கக் கூடாது என்றும் நீ எழுதுகிறாய். இது மட்டும் எளிதில் நடக்குமா அம்மா? பியூனுக்குச் சம்பளம் 15 ரூபாய். பெரிய அதிகாரிக்குச் சம்பளம் சில ஆயிர ரூபாய். மடுவும் மலையும்தான். இதை மாற்றுவது எளிய வேலையா? சம்பளம் இருக்கட்டும். பஞ்சமே வாழ்வாக இருக்கிற பியூனுக்குப் பஞ்சப்படி 18 ரூபாய். ஆனால் பஞ்சமே தெரியாத கலெக்டருக்குப் பஞ்சப்படி 200 ரூபாய்க்கு மேல். இந்த நிலைமையை மாற்ற முடியுமா? இதில் ஒன்றும் புரட்சியோ இரத்தமோ கத்தியோ இருப்பதாகத் தெரியவில்லை. உரிமையும் அறமும் நியாயமுமே இதில் உள்ளன. இதைச் செய்ய முடியுமா? நீ விரும்புவதுபோல் செய்வதாக இருந்தால் எனக்குத் தடை இல்லை. ஆனால் சம்பள மட்டத்தால் ஒரு கிளர்ச்சி உண்டாகும் என்பது தவிர, பொது மக்களின் வாழ்க்கை அப்படியேதான் இருக்கும். உழவர்களின் நிலைமையும் தொழிலாளிகளின் நிலைமை

யும் மாறுமல் இருக்கும். இவர்கள்தான் நாட்டில் பெரும்பான்மை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறுபான்மை. அதனுல் கூட்டுறவுச் சங்கங்களே தக்கவழி என்று இன்னும் கருதுகின்றேன்.

சம்பளத் திட்டம் ஒழுங்குபட்டாலும் அவர்களை அட்டைகளாக உறிஞ்சுவதற்கு வியாபாரிகள் இருந்து கொண்டே இருப்பார்கள். (வியாபாரிகளின்மேலும் குற்றமில்லை. அவர்களும் ஒருவரைப் பார்த்து மற்ருெருவர் போட்டியிட்டுக்கொண்டு பணவேட்டை ஆடுகின்ருர்கள். அவர்கள் வேறு என்ன செய்வார்கள்? சமூகம் பணக்காடாக — விலங்குகள் திரியும் இடமாக — இருக்கின்றது. ஆகையால் அவர்கள் வேட்டையாடாமல் வேறு என்ன செய்வார்கள்?) நான் சொல்கின்றதுபோல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைந்தால், அட்டைபோல் உறிஞ்சும் வாழ்வுக்கே இடமில்லை. கிராமத்தை அடுத்து உள்ள சங்கத்தில் உணவுப் பொருள் சேரும். தொழிற்சாலைகளை அடுத்து உள்ள இடத்தில் மற்றப் பொருள்கள் சேரும். இந்த இரண்டு சங்கங்களும் பண்டமாற்று நடத்தி உழவர்களையும் காப்பாற்றலாம்; தொழிலாளிகளையும் காப்பாற்றலாம்.

நீ சொல்லுவதுபோல் முதல் முதலில் கொஞ்சம் குறையும் ஊழலும் இருந்தே தீரும். அது எந்த அமைப்பிலும் முதலில் இருக்கும். கள்ள வாணிகம் தலைகாட்டும்; அதை அடக்கவேண்டிய கடமையை அரசாங்கம் மேற்கொள்ளும். நாளடைவில் வியாபாரம் என்பதே மறைவிலும் ஒளிப்பிலும் இல்லாதபடி செய்து, சங்கங்களை மக்கள் நம்பும்படியாகச் செய்யலாம். குடும்பங்களில் உள்ள ஆட்களை எண்ணி அவர்களுடைய தேவைகளைக் கணக்கிட்டுப் பங்கிட்டு வழங்குவதிலும்

முதலில் இடர் இருக்கும். வேறு கடைகள் இல்லாமல் அழிந்த பிறகு, பழகப் பழக இந்த இடர்கள் எல்லாம் தீர்ந்துபோகும் அல்லவா? புதியது என்ற மயக்கமும் வேண்டாம். மற்ற நாடுகளில் உண்டா என்று ஆராயும் மந்தை யுணர்ச்சியும் வேண்டாம். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் பரந்த நோக்கமே வேண்டும்.

வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பல பேருக்கு வேலை இல்லாமல் போகுமே என்று ஒரு தடை எழுதியிருக்கின்றாய் அம்மா! ஒரு கிராமத்தில் எத்தனைபேர் வியாபாரிகள்? உழவர்களாகிய பெரும்பாலோர் நன்மைக்காக, வியாபாரிகள் நாலைந்துபேர் திருந்தி வாழக் கூடாதா? அந்த நாலைந்து பேருக்கும் கூட்டுறவுச் சங்கங்களில் தொழிலும் வருவாயும் தரலாமே! நகரங்களில் பெரிய கடைகளிலும் கம்பெனிகளிலும் முதலாளி ஒவ்வொருவர்தான். மற்றவர்கள் சம்பளக்காரர்களே! அவர்கள் அத்தனை பேருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இடம் கொடுத்து வருவாய் தரும். அவ்வாறே தொழிற்சாலைகளிலும் உண்டாக்கப்படும் பொருள்களைச் சேர்த்துக் கூட்டுறவுச் சங்கங்கள் வாணிகம் நடத்தலாம்.

கட்சிகளும் எதிர்ப்புக்களும் ஏற்படுவது, உழவர்களும் தொழிலாளிகளும் கைதட்டக் காத்திருக்கின்றார்கள் என்னும் காரணத்தாலேயே. உழவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் நல்வாழ்க்கை அளிக்கும் அரசாங்கமே கட்சிகளையும் எதிர்ப்புக்களையும் ஒழித்து நாட்டை அமைதியாக ஆள முடியும். இதுதான் ஆக்கவேலை. இந்த ஆக்கவேலையைச் செய்யாமலிருந்தால், எதிர்ப்பு வளர வளர, கட்சிகள் அழிவு வேலையில் இறங்கிவிடுகின்றன. அந்த அழிவு வேலையை அழிப்

பதற்காக, படையும் பட்டாளமும் கொண்டு அடக்கு முறையைக் கையாள வேண்டி வருகின்றது. அதனால், கூட்டுறவு அமைப்புக்களை ஆக்க வேலையின் பகுதிகள் என்று கருதிப் போற்ற முன்வந்தால், எல்லாம் ஒழுங்குபடும் அல்லவா? எதிர்ப்பு வேலையே கடமையாகக் கொண்டு அதனாலேயே வளர்ச்சியடையும் கட்சிகள் இருக்குமிடம் தெரியாமல் ஒடுங்கும் அல்லவா?

கட்சிகள் என்று நினைக்கும்போதே எனக்கு ஒரு வகை வெறுப்பும் தோன்றுகின்றது. பெரும்பாலான கட்சிகளின் உயிர் தமிழ்நாட்டில் இல்லை; அவற்றின் தலைமை நிலையம் வேறு எந்த நாட்டிலாவது இருக்கும். இப்படி எங்கோ உயிரை வைத்துக்கொண் டிருக்கும் கட்சி, தமிழ்நாட்டில் கைவிரலையாவது கால்விரலை யாவது ஆட்டும். அந்த ஆட்டத்தைக் கண்டு பொது மக்கள் அசைந்து ஆட வேண்டும்; பாட வேண்டும். நான் சின்ன பையனாக இருந்தபோது, பள்ளிக் கூடத்து வாத்தியாரின் பேரைச் சொல்லிச் சொல்லிப் பாட்டி எனக்குச் சோறு ஊட்டின கதையாகவே இருக்கின்றது இது. இப்படித் தமிழ் நாட்டில் எழெட்டுக் கட்சிகள் இருப்பதாக ஒரு மாணவ நண்பன் நேற்றுக் கூறினான். அவன் சொன்னதைக் கேட்டு நான் வேடிக்கையாக, "நல்லது தானே! கருத்து வேற்றுமை வளரும்" என்றேன். அவன் உடனே "அறிவு வளர்ந்தால்தான் கருத்து வேற்றுமைக்கு இடம் உண்டு. நம் கட்சி சொல்வதெல்லாம் சரி, எதிர்க் கட்சி சொல்வதெல்லாம் தவறு என்று முரட்டுப் பற்றோடும் மூட நம்பிக்கையோடும் கட்சிகளில் கலந்து வாழ்கின்றவர்களுக்குக் கருத்து ஏது? கருத்து இருந்தால்தானே கருத்து வேற்றுமை இருக்க

முடியும்? கட்சி இருப்பதால் கட்சி வேற்றுமைமட்டும் தலைவிரிகோலமாய் ஆடுகின்றது" என்றான்.

பிறகு என் கருத்தைக் கேட்டான். என் கருத்துத் தான் உனக்குத் தெரியுமே அம்மா! "கொள்கைகளும் கருத்துக்களும் பல வகையாகப் பரவ வேண்டுமானால் கட்சிகள் இருக்கக் கூடாது" என்றேன். அவன் சொன்னதையேதான் நான் வேறு வகையாகத் திருப்பிச் சொன்னேன். ஆனால் அவனுக்கு ஒரே திகைப்பாகி விட்டது. அவனுக்குத் தெளிவு உண்டாக்குவதற்கு அரை மணி நேரம் ஆகிவிட்டது. அம்மா! கிரகணத்தில் சந்திரனைப் பாம்பு பிடிக்கவில்லை, பூமியின் நிழலே மறைக்கின்றது என்பதைக் கல்வியறிவில்லாதவனுக்குக் கற்றுக்கொடுப்பது இதைவிட எளிதாகத் தெரிந்தது. எப்படியோ கடைசியில், கட்சிகள் இருக்கும் வரையில் கட்சிப் பற்றும் வெறியும் இருக்கும், அறிவு வளர வழி இல்லை என்று உடன்படச் செய்தேன். அப்போதும் அவன் கட்சி அற்ற நிலைமை வர முடியாது என்று உறுதி கூறினான்.

நண்பன் தமிழ்நாட்டு வரலாறு அறிந்தவன். அதனால் அதைக்கொண்டு விளக்க முயன்றேன். "தமிழ் நாட்டு வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்களின் காலத்தில் என்ன ஆட்சி இருந்தது?" என்று கேட்டேன். "முடியாட்சி" என்றான். "இப்போது அமெரிக்காவில் நடப்பதும் இந்தியாவில் இருப்பதும் என்ன ஆட்சி?" என்றேன். "குடியாட்சி" என்றான். "சேரன் செங்குட்டுவனிடத்திலோ, பாண்டியன் நெடுஞ்செழியனிடத்திலோ, கோப்பெருஞ் சோழனிடத்திலோ இன்று இந்தியாவில் உள்ள ஆட்சி முறையைக் கூறினால் என்ன எண்ணுவார்கள்?" என்றேன். "தமிழ் நாட்டை மற்றவர்கள் ஆள்வதா

என்று சினம் பொங்கிப் படை எடுப்பார்கள்" என்றான். "அந்த வேந்தர்களின் வேலுக்கும் வாளுக்கும் இப்போது இடம் இல்லை. தமிழ் நாட்டாரே இப்போது தமிழ் நாட்டை ஆள்வதாக வைத்துக்கொண்டு சொல். அப்போது வேந்தர்கள் என்ன கூறுவார்கள்?" என்று கேட்டேன்.

நண்பன் திகைத்தான். "வேந்தர்களுக்கு இந்த ஆட்சி முறையே தெரியாது; அவர்கள் கனவும் கண்டிருக்க மாட்டார்கள். ஆகையால் நம்ப முடியாமல் பொய் என்று தள்ளியிருப்பார்கள்" என்றேன். அப்போதுதான் நண்பனுக்கு விளங்கியது. இன்று நண்பன் கட்சிஅரசியல் போகாது என்கின்றான். "முடிவேந்தர் இல்லாமல் தமிழ்நாடு வாழமுடியாது. மன்னவன் உறங்கினாலும் அவனுடைய ஒளி நாட்டைக் காக்கவேண்டுமே. ஆகையால் முடிமன்னன் இல்லாத நாட்டில் ஆட்சி ஏது?" என்றுதான் பழங்காலத்துத் தமிழ் மக்கள் எண்ணியிருந்தார்கள். இன்று உள்ள தமிழ் மக்கள் எதிர்காலத்தைப் பற்றி எண்ணுவதும் இப்படிப்பட்டதே. முடியாட்சி மறைந்தது போல் ஒருநாள் கட்சியாட்சியும் மறையும். பிறகுதான் குடியாட்சி வரும். இவ்வாறு சொன்ன பிறகு நண்பன் உடன்பட்டான். பிறகு நான் அவனை நோக்கி, "இனிமேல் ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து என்று அரசியலைக் கண்மூடிப் பின்பற்றும் வழக்கம் வேண்டாம். நாமே புதுவழி வகுக்கவும் முன்வர வேண்டும்" என்று சொல்லிக் கூட்டுறவு அமைப்புக்களைப் பற்றியும் விளக்கினேன்.

அந்த நண்பனிடம் ஒரு நல்ல பழக்கம் இருக்கின்றது. அதை எல்லோரும் கற்றுக்கொண்டால் எவ்வளவோ பயன் விளையும். சென்னையில் தெருக்களில்

சுற்றும்போது பலமுறை அவனோடு போயிருக்கிறேன். அதனால் அந்தப் பழக்கம் தெரியவந்தது. ஏழை மக்கள் குடியிருந்து வாழ்க்கை நடத்தும் பொத்தல் குடிசைகள் வழியாக நடந்து போகும்போது, அந்தக் குடிசை களைப் பார்த்துக் கைகுவித்து, "பண்பட்ட நாகரிகமும் பழம் பெருமையும் உடைய தமிழ்ப்பெருமக்கள் வாழும் மனைகள்" என்பான். மரங்களின் கீழும் வெட்ட வெளியிலும் கற்களை அடுப்பாக மூட்டிச் சமையல் செய்து வானமே கூரையாய் வாழும் குடும் பங்களைப் பார்க்க நேரும்போது, "தாய் நாட்டின் தவப் புதல்வர்கள்" என்று கைகூப்புவான். இராக் காலங்களில் பெரிய தெருக்களில் சாய்க்கடை ஓரங் களில் கல்லிலும் மண்ணிலும் படுத்து அலுத்துத் தூங்கும் பாட்டாளி மக்களைப் பார்த்துக் கைகுவித்து, "ஆகாய விமானமும் வானொலியும் கண்டுபிடித்த விஞ்ஞான மனித பரம்பரை" என்பான். இவ்வாறு கூறும்போது எனக்குச் சிரிப்பாக இருக்கும். அவன் முகத்தில் புன்முறுவல் இருக்கும். ஆனால் அவன் உள்ளத்தில் துயரமே குடிகொண்டிருந்தது என்பதை ஒருநாள் அவன் விட்ட பெருமூச்சாலும் மற்றொரு நாள் கலங்கிய கண்ணீராலும் கண்டுகொண்டேன்.

இந்த நண்பன் எதிர்காலத்தில் பெருந்தொண்ட னாக மாறக்கூடும் என்று எதிர்பார்க்கின்றேன். ஆப்ர ஹாம்லிங்கன், லெனின், விவேகாநந்தர், காந்தி முத லானவர்கள் ஏழை மக்களை இப்படிப் பார்த்து உருகி யிருக்கின்றார்கள்; உணர்ந்திருக்கின்றார்கள். அதனால் தான் அரும் பெருஞ் செயல்களைச் செய்திருக்கின்றார் கள். ஏழைகளின் குடிசைகளையும் வாழ்வையும் பார்க் கும்போது இப்படி நினைக்கின்றவனே உண்மையாகத் தொண்டு செய்ய முடியும். மாடி வீடுகளையும், நெடுந்

தெருக்களையும், பெரிய பெரிய அரசாங்கக் கட்டிடங்களையும், கல்லூரிகளையும், கடைத் தெருக்களையும் திரும்பத் திரும்பப் பார்த்துவிட்டு, இதுதான் நாகரிக உலகம், இதுதான் இந்தியா, இதுதான் தமிழ் நாடு என்று எண்ணுகின்றவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கின்றான். உலகப் படத்தையும் இந்தியப் படத்தையும் தமிழ்நாட்டுப் படத்தையும் பூகோள பாடத்தில் உள்ளபடி அழகாக நிறம் தீட்டி எழுதிக் கண்ணாடியும் சட்டமும் இட்டு, கூடத்தில் அலங்காரமாக மாட்டி, சந்தன குங்குமம் இட்டுப் பூசை செய்கிறவனே அவனை விடச் சிறந்த நாட்டுத் தொண்டன் என்று கூறலாம்.

ஆகையால், உண்மையான நாட்டுப் பற்று வளர வேண்டுமானால், உழவர்களையும் தொழிலாளர்களையும் பார்த்து வழிபட்டு உணரவேண்டும். அப்படிப்பட்ட நாட்டுப்பற்று வளர்ந்தால்தான், பாரதியார் விரும்பியவாறு உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்கின்றோமா என்று உள்ளம் பதைக்கும்; அப்போதுதான் அவர்களுடைய வாழ்க்கையை வளம்பெறச் செய்வதற்கு உரிய உண்மை வழி விளங்கும். அப்போதுதான் உழவர்களின் உழைப்பின் பயன் தொழிலாளிகளுக்கும், தொழிலாளிகளின் உழைப்பின் பயன் உழவர்களுக்கும் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்வது கடமையாக விளங்கும். கூட்டுறவு அமைப்புக்களை ஏற்படுத்துவதே முதல் கடமை என்பதும் தெளிவாக விளங்கும்.

அன்புள்ள மகன்,

எழில்

# 8

அன்புள்ள அம்மா!

**உ**லகமெல்லாம் வேற்றுமை ஒன்றும் பாராட்டாத காலம் வரப்போகின்றது என்றும், ஆகையால் பிரிவுகளையும் பிளவுகளையும் வளரவிடக்கூடாது என்றும் எழுதியிருக்கின்றாய். இதைவிடப் பரந்த நோக்கம் கொண்ட எழுத்து வேறு என்ன இருக்க முடியும்? அந்தச் சொற்களைப் படித்து நினைக்க நினைக்க இன்பமாக இருக்கின்றது. வரப்போகின்ற அந்தக் காலத்தில் பிறந்து வாழும் பேறு பெறுமல், முன்னதாகவே பிறந்து பிணக்கும் பிளவும் கலையாக விளங்கும் காலத்தில் வாழ நேர்ந்திருக்கின்றதே என்று வருத்தமும் ஏற்படுகின்றது.

ஆனல், இன்று யார்மேல் குறைசொல்வது? பிணக்குகளையும் பிரிவுகளையும் எல்லோரும் வளர்த்து வருகின்றார்கள். தமிழர்கள் தவிர மற்றவர்கள் அளவு மீறி வளர்த்து வருகின்றார்கள். தமிழ்நாட்டு மக்களுக்கு உலக ஒற்றுமையைப் புதிதாகக் கற்றுக்கொடுக்கவேண்டியதில்லை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மெய்ம்மொழி தமிழ் நாட்டு மக்களின் செவியில் இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கேட்டுவருகின்றது. இன்றும் அந்த உண்மையை நம்புகின்ற மக்களே பெரும்பான்மையாக இருந்துவருகின்றார்கள். ஆகையால் இந்த உபதேசம் தமிழர்களுக்கு அவ்வளவாக வேண்டியதில்லை. மாகாணப்பற்றும் மொழிப்பற்றும் மற்றப் பற்றும் தலைகால் தெரியாமல் வளர்ந்துள்ள வெளி மாகாணத்து மக்களுக்கு இந்த உபதேசம் தேவை.

நிறம், பிறப்பு முதலிய காரணங்களைச் சொல்லிக் கொண்டு வேற்றுமை பாராட்டும் ஐரோப்பா அமெரிக்கா நாட்டு மக்களுக்கு இந்த உபதேசம் மிகுதியாகத் தேவை.

தமிழ்நாடு இதுவரையில் யாருக்கு இடம் தரவில்லை? யாரை வரவேற்க மறுத்துவிட்டது? தமிழ் மொழிப் பற்றும் தமிழ்நாட்டுப் பற்றும் இல்லாமல் நேர்மாறாகப் பகைகொண் டிருக்கின்றவர்களுக்கும் தமிழ்நாட்டில் இடையூறு இல்லை. பாகிஸ்தானிலிருந்து நேற்று வந்த அகதிகளையும் கேட்டுப்பார்க்கலாம். அவர்களும் மற்ற மாகாணங்களுக்குச் செல்லத் தயங்குகின்றார்கள். அங்கெல்லாம் வெறுப்பும் புறக்கணிப்பும் இருக்கின்றன என்று அறிந்து தமிழ்நாட்டிற்கு வரவே விரும்பி முன்னிற்கின்றார்கள். காரணம் என்ன? தமிழ்நாடு அவர்களுக்கும் விருப்பும் வரவேற்பும் காட்டி உதவுகின்றது. தமிழர்கள் தமக்கு நல் வாழ்வு இல்லையானாலும், வந்தவர்களைக் காப்பாற்றுவதில் பின்வாங்குவது இல்லை. தம் வாழ்வுக்கு அரு மருந்தாய்க் கிடைத்த பொருளே ஆனாலும் மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழும் மனம் தமிழர்களுக்கு இன்னும் ஓரளவு இருந்துவருகின்றது.

ஆனாலும் தமிழனும் கெட்டவனாகின்றான்; வேறுபாடு பார்க்கத் தொடங்குகின்றான். எப்போது தெரியுமா? மற்ற நாட்டு மக்களோடு பழகிய பிறகுதான். கல்லூரிவிடுதிகளில் பழகிய என்னைப் போன்றவர்களைக் கேட்டுப் பார். முதலில் தமிழ்மாணவர்கள் எல்லோருடனும் பழகுவார்கள். மற்றநாட்டு மாணவர்களிடமும் அன்பாகப் பழகுவார்கள். நாளடைவில் அவர்கள் பழகும் முறையில் உள்ளம் கலக்கவில்லை என்பதை உணர்கின்றார்கள். மாகாணப்பற்றும்

மொழிப்பற்றும் மற்றப் பற்றும் கொண்டு ஆந்திரரும் கன்னடத்தாரும் மலையாளத்தாரும் குஜராத்தியரும் மற்றவர்களும் மனமார ஒட்டாமல் இருப்பதைக் காண்கின்றார்கள். பிறகுதான் தமிழ் மாணவர்களுக்கு மொழிப் பற்றும் வளர்கின்றது; மாகாணப் பற்றும் தொடங்குகின்றது.

இது மாணவர்கள் அனுபவம். அரசியலிலும் அப்படித்தான். தமிழ்நாட்டுத் தலைவர்கள் மற்ற நாடுகளுக்குப் போய்ப் பழகித் தமக்கு இருக்கும் புறக்கணிப்பைத் தெரிந்துகொண்ட பிறகுதான் மாகாணப் பற்றுக் கொள்கின்றார்கள். தமிழ்நாட்டு வியாபாரிகளும் அவ்வாறே முதலில் கபடமற்றவர்களாக மற்றவர்களோடு பழகுகின்றார்கள். பிறகுதான் மெல்ல மெல்லத் தம்மிடம் மற்றவர்கள் பழகுவதில் உள்ள வேறுபாட்டைக் கண்டுபிடித்து மாறுகின்றார்கள். இப்படி மற்றவர்கள் குறுகிய நோக்கமும் தன்னலமும் கொண்டு தம்மை நடத்தும் முறைகளைத் தெளிந்த பிறகும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று நம்பும் நம்பிக்கை தளரவில்லை. இதிலிருந்தே இயல்பாகவே தமிழர்கள் நல்லவர்கள் என்றும், பரந்த நோக்கம் உடையவர்கள் என்றும் தெரியவில்லையா? மற்றவர்களின் குறுகிய நோக்கமும் செயலும் கண்டு கண்டுதான் நம்மவர்கள் கெடுகின்றார்கள். சில வீடுகளில் மருமகள் நல்லவளாகவே வருவதும், மாமியின் தன்னலத்தையும் சிறுவாணத்தையும் கண்டு தானும் அப்படி மாறுவதும் இல்லையா? இன்னும் சில குடும்பங்களில் மாமி நல்லவளாக இருந்தும், மருமகளின் காசு முடிக்கும் திறனைக் கண்டு தானும் அதுபோல் செய்யக் கற்றுக்கொள்ளவில்லையா? தமிழன் குறுகிய

நோக்கமும் அப்படிக் கற்ற கல்வியே தவிர, இயல்பான பண்பு அல்ல.

ஜெர்மன் நாவல் ஒன்று படித்தேன். அதில் அனுபவம் நிறைந்த ஒருவன் இளைஞன் ஒருவனுக்குச் சொல்லும்போது, “ எப்போதும் உண்மை பேசாதே; மற்றவர்கள் செய்த உதவியை நினைத்து நன்றி பாராட்டாதே; அதை மறந்துவிடு. உன்னைப் பற்றியே முதலில் எண்ணக் கற்றுக்கொள் ” என்று தலைகீழாக உபதேசம் செய்கின்றான். உபதேசம் செய்தவனும் கெட்டவன் அல்ல; நல்ல நோக்கங்கள் உடையவன்தான். ஆனால், சுற்றுப்புறம் கெட்டு அழுகியிருக்கும்போது, நாம் மட்டும் தூய்மையாக இருக்க முடியுமா? ஒன்று அழுகலை அப்புறப்படுத்தித் திருத்த வேண்டும், அல்லது நாமும் சேர்ந்து அழுக வேண்டும் என்பதுதான் அவ்வாறு உபதேசம் செய்தவனுடைய கருத்து. தமிழர்களிலும் சிலர் அப்படி எண்ணத் தொடங்கிவிட்டார்கள். தவறு நம்மைப்போன்றவர்கள் மேல்தான். ஏன் என்று கேட்கலாம். நாம் உலகத்தைத் திருத்துவதற்தாக என்ன செய்தோம்? ஒன்றும் செய்யாமல் அழுகவிட்டோம். அதன் பயனை அனுபவிக்க வேண்டிய நாள் நெருங்கும்போது, ஒதுங்குவதற்கு உரிமையும் இல்லை, வழியும் இல்லை. ஆனால் அதற்காகத் தலைகீழ் உபதேசம் செய்யப் போவதாக எண்ண வேண்டாம். எனக்கு இன்னும் அறத்தில் நம்பிக்கை இருந்துவருகின்றது; இமயமலை போல் இருந்துவருகின்றது. அதை ஒருவரும் அசைக்க முடியாது.

எடுத்துக்காட்டாக ஒன்று சொல்வேன். நான் கல்லூரியில் சேர்ந்த தொடக்கத்தில், “ ஏழைப் பிள்ளைகளோடு சேர்; பொறாமை இருக்காது, பொய் இருக்

காது, உண்மையான நல்ல பிள்ளைகள் இருப்பார்கள்" என்று எனக்குச் சொல்லியனுப்பினுய். அவர்களோடு சேர்ந்து பழகிய பிறகோ, பொய்யும், பொருமையும் ஏமாற்றமும் மிகுதியாக இருப்பதாகவே தெரிந்து கொண்டேன். ஆனுல் அதற்காக அவர்களை ஒதுக்க வில்லை; பிரிக்கவில்லை. அவர்களைத் திருத்த வேண்டும் என்ற கடமையை உணர்ந்து என்ஞல் இயன்றதைச் செய்துவந்தேன் அல்லவா? அப்போதும் நான் விழிப் பாகவே இருந்தேன். தற்காப்போடுதான் இருந்தேன். மற்றவர்களைக் காப்பாற்றப் போய் நான் வழுக்கி விழாமல் இருக்க வேண்டும் அல்லவா? அதனுல் திருந்தக் கூடியவர்களிடம் மட்டுமே பழகினேன்.

"உள்ளொன்று புறம் ஒன்ருக நடக்காதே; தந்திரம் வேண்டாம். மற்றவர்கள் நம்பும்படியாக நடந்துகொள்" என்று சொல்லியனுப்பினுய். நானும் அப்படி நடக்கவேண்டும் என்று எண்ணினேன். ஆனுல் மற்றவர்களைப் பார்த்துப் பழகிய பிறகு வேறு பாடமே கற்றுக்கொண்டேன். உன் அறிவுரையில் சிறு திருத்தம் செய்துகொண்டேன். இதை உன்னிடம் சொல்லியிருக்கின்றேன் அல்லவா? "உள்ளும் புறமும் ஒத்து இரு. தீங்கு நேரும் இடத்தில்மட்டும் உள்ளத் தில் உள்ளதை வெளிப்படுத்தாமல் மௌனமாக இரு" என்று மாற்றிக்கொண்டேன். இது மற்றவர்கள் வாழ்க்கையைப் பார்த்த அனுபவத்தால் கற்றறிந்தது. என்ன செய்வது? சுற்றுப்புறத்தில் தந்திரமும் பொல் லாங்குமே நிறைந்திருக்கும்போது ஒருவன் மட்டும் உண்மையாக நடந்து பலியாக வேண்டுமா? அதனுல் நான் சுற்றுப்புறத்தி லிருந்து ஒதுங்கித் துறவியாக வாழவில்லை. சுற்றுப்புறத்தைத் திருத்த முயல்வேன். எஃஞல் ஆனதைச் செய்வேன். என்னுல் ஒன்றும்

செய்யமுடியாதே என்று ஒருநாளும் சோர்வடைய மாட்டேன். இது உனக்குத் தெரியுமே!

இப்படியே வாழ்க்கையில் எல்லாத் துறையிலும் சிக்கல்கள் உள்ளன. அதனால்தான் அறத்தைக் கடவுளாகக் கொண்ட தமிழனும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று சொல்லிச் சொல்லித்தான் கெட்டோம் என்று எண்ணும் நிலைமை வந்தது. மற்றவர்களின் குறுகிய நோக்கம் தொத்துநோய் போல் இவனையும் பற்றிக்கொண்டது. பலர் திருடர்களாக இருக்கும் அமைப்பில் திருட்டுக்கு ஆளாகாமல் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா? பலர் தந்திரக்காரராக இருக்கும் அமைப்பில் தந்திரத்திற்குப் பலியாகாமல் காத்துக்கொள்ளும் திறமை வேண்டாமா? பலர் மாகாணப் பற்றும் மற்றப் பற்றும் கொண்டு வாழும் அமைப்பில், தற்காப்புக்கு வேண்டிய அளவு கடமைப் பற்றுவது தமிழனுக்கு வேண்டாமா? மற்றவர்களின் மேலும் குற்றம் இல்லை. வாழ்க்கைப் போராட்டம் அவர்களைக் கெடுத்துவிட்டது. அது திருந்தினால் அவர்களும் நல்லவர்கள் ஆவார்கள்.

வாழ்க்கைப் போராட்டம் திருந்திச் சுற்றுப்புறம் தூய்மையாகட்டும். அம்மா! உண்மையாகச் சொல்கின்றேன். அன்றைக்குத் தமிழனைப் போல் கொண்டாட்டத்தில் திளைக்கப் போகின்றவர்கள் யாவரும் இல்லை. ஆகையால் நீ எழுதியபடி அந்த நல்ல நாள் வரட்டும். அது தமிழனுக்குச் சிறந்த நாள்; உரிமை நாள்; இன்ப நாள்; "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழ் வாழும் நாள்.

ஆனால், இன்றைக்குத் தமிழனைச் சுற்றிப் பாரம்மா! தொழில் நிலையங்கள், வியாபார நிலையங்கள், அரசியல் கட்சிகள், சமயத்துறை, மொழித்துறை

முதலான எல்லா இடங்களிலும் பார் அம்மா! தமிழன் உழைக்கின்றான்; சுற்றுப்புறம் அவனை விழுங்கப் பார்க்கின்றது; மெல்ல மெல்ல விழுங்குகின்றது. உண்மை பேசும் தமிழன், உதவிக்கு முன்வரும் தமிழன், உழைப்பாளியான தமிழன் தன்னலத்திற்கும் தந்திரத்திற்கும் ஏமாற்றத்திற்கும் பலியாகின்றான்.

அம்மா! இதை எழுதும்போதும் என் மனச்சான்று என்னைத் தடுக்கின்றது. ஏன்? மற்றவர்கள் செய்யும் தீமைகளுக்குப் பலியாவதில் மகிழ்ச்சியைக் கண்ட பரம்பரை அல்லவா? இனப்பற்றும் குறுகிய நோக்கமும் தன்னலமும் மலிந்த சூழலிலும் பரந்த உணர்வோடு வாழ வேண்டும் என்று தமிழனுடைய மனச்சான்று கூறுகின்றது.

மற்றவர்களுடைய மனச்சான்றோ இதற்கு நேர் மாறாக இருக்கும்போல் தோன்றுகின்றது. மற்றவர்கள் மேடைமேல் ஏறினால், "தன்னலம் அழிய வேண்டும்; குறுகிய நோக்கம் ஒழிய வேண்டும்; மாகாணப் பற்று நீங்க வேண்டும்" என்று பேசுகின்றார்கள். மேடையை விட்டுக் கீழே இறங்கியதும், யார் யாருக்கு என்ன தீமை செய்தால் தாம் முன்னுக்கு வர முடியும் என்று ஆராய்ந்து அதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள். "கலை வளர வேண்டும், ஒழுக்கம் உயர வேண்டும்" என்று மேடையில் முழங்குகின்றார்கள். கீழே இறங்கியதும் கையில் காசு பெருக வேண்டும், வயிறு நிறைய வேண்டும் என்று பாடுபடுகின்றார்கள். "நாம் தியாகம் செய்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும்; நம்மில் ஒருசிலர் அழிந்தாவது உண்மையைப் போற்ற வேண்டும்" என்று மேடையில் கூவுகின்றார்கள். அடுத்த மணியிலேயே மற்றவர்கள் செய்யும் தியாகத்தை எல்லாம் தம் சொந்த

நன்மைக்கே பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அலைகின்றார்கள். "நாமெல்லாம் இறைவனுடைய குடும்பம்; நமக்குள் பிளவு கூடாது" என்று மேடையில் உபதேசம் செய்கின்றார்கள். அடுத்த நொடியிலேயே மற்றவர்களைத் தொலைத்தால் அல்லாமல் நம் வாழ்வுக்கு வழி இல்லை என்று அமைதியாகவும் தந்திரமாகவும் அழிவுவேலை செய்கின்றார்கள். இவர்களுக்கு இப்படிப்பட்ட மனச்சான்று எவ்வாறு அமைந்ததோ தெரியவில்லை.

தமிழர்களோ வாயளவில் இனப்பற்றும் மொழிப்பற்றும் கொண்டிருந்தாலும், செயல் நேரும்போது பரந்த நோக்கத்தோடு தம்மை மறந்துவிடுகின்றார்கள். இன்னும் சிலர் இனப்பற்று, மொழிப்பற்று என்று சொல்லிக்கொண்டு, தமிழரையும் தமிழ்மொழியையும் குறை கூறிக்கொண்டு, உள்ள சிறு ஒற்றுமையையும் சிதைத்துவருகின்றார்கள். ஆனால் மேடையில் நின்று குறுகிய நோக்கம் பேசுகின்றவர்களும் கீழே இறங்கியவுடன் பிறர்க்கு உதவி செய்து தம்மை இழக்கவே துணிகின்றார்கள்.

இந்தக் குறைக்கெல்லாம் காரணம் என்ன என்பது? தமிழனுடைய உடலமைப்பில் குறையா? உள்ளத்தின் அமைப்பில் குறையா? எனக்கு ஒன்றுமட்டும் படுகின்றது. தமிழன் மூளைவளர்ச்சியில் சிறந்தவனாக இருந்தபோதிலும்,அதைவிட இதய வளர்ச்சியில் மிகுந்திருப்பதே வீழ்ச்சிக்குக் காரணம் என்று படுகின்றது. அதாவது, தமிழன் அறிவை விட உணர்ச்சியை மிகுதியாக வளர்த்தது குறையே என்று படுகின்றது. தமிழிசையும் தமிழ் இலக்கியமும் தமிழ் நாகரிகமும் தமிழனுக்கு உணர்ச்சியைப் பெருக்கக்கூடியவைகளாகவே இருக்கின்றன. தமிழ்நாட்டின் அரிசியுணவும் மென்

மையை வளர்த்து அவனை உணர்ச்சி மிக்கவனாகச் செய்யக் காரணமாகின்றது. உணர்வினால் பெரிய நல்லையை எட்டலாம்; சிறந்த நிலையை அடையலாம்; எளிதில் தன் அழிவையும் தேடிக்கொள்ளலாம்; பிறர்க்கு இரையாகலாம். அவ்வாறு அல்லாமல் அறிவு மிகுதியாக இருந்தால், தற்காப்புக்கு உரிய வழியில் வாழ்க்கையை அமைத்து மற்றவர்கள் செய்யும் தீமைகளுக்கு இடமில்லாமல் பிழைக்க முடியும்.

அம்மா! அறிவைவிட உணர்வே சிறந்தது என்று ஒருமுறை நீ சொன்னதும் நினைவுக்கு வருகின்றது. எனக்கு என்னவோ, அது உண்மையல்ல என்று தோன்றுகின்றது. உணர்வு மிகுதியால் தனிமனிதர் சிறப்புப் பெற்றிருக்கின்றார்கள். சிறந்த கலைஞர்களையே எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஆனால் நாடு என்று ஆராய்ந்து பார்க்கும்போது அது தவறாகவே தோன்றுகின்றது. இது வரையில் அழிந்த நாகரிகங்களும் நாடுகளும் உணர்வைப் பெருக்கி அழிந்தவைகள் என்றே கருதுகின்றேன். பழந் தமிழ்நாட்டில் வள்ளல்களுக்கும் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் கணக்கு உண்டோ? ஆனால் அந்த நாடு மறைந்தது. இன்றும் தமிழ்நாட்டில் உணர்ச்சி மிகுந்த அரசியல் தலைவர்களுக்கும் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் பஞ்சம் இல்லை. ஆயினும் நாட்டின் நிலைமை சீர்ப்பட்டதா? இல்லை. மாறாக, அறிவு மிக்கவர்கள் பலர் இருந்தால் நன்மை உண்டாகும். மக்கள் அறிவால் எண்ணிப் பார்க்கக் கற்றுக்கொள்வார்கள். ஆத்திரமும் எழுச்சியும் இல்லாமல் அமைதியாக முன்னேறக் கற்றுக் கொள்வார்கள். ஆனால் இப்போது உணர்ச்சி மிக்கவர்களே பலர் இருக்கின்றார்கள். அவர்களுடைய எழுத்தும் பேச்சும் மக்களை உணர்ச்சி மயமாக

KARAIKUDI.

வளர்த்துவருகின்றது. மக்களுக்குப் பொறுமையும் தற்காப்புணர்ச்சியும் குறைந்து, ஆத்திரமும் தம்மை மறந்த வெறியும் மிகுந்து தம்மைத் தாமே குறை கூறிப் பிரிந்து பிரிந்து சிதறுகின்றார்கள். "தமிழ் நாடே! போதும் உன்னுடைய கலையும் உணர்வும். அவற்றை அளவுபடுத்திக்கொண்டு அறிவியலைப் பெருக்கு, அறிவைப் பெருக்கு" என்று சொல்லத் தோன்றுகிறது. உலகத்தில் அறிவு மிகுந்த அரசியல் தலைவர்களே மேன்மேலும் உயர்கின்றார்கள். உணர்ச்சி மிகுந்தவர்கள் வாடி நைந்து அழிகின்றார்கள். இந்தத் தலைவர்களைப் பின்பற்றும் மக்களும் இப்படியே உணர்ச்சியால் அழிகின்றார்கள்.

அம்மா! நீயும் தாயினத்தைச் சார்ந்தவள்; ஆகையால் என்மேல் வருந்த வேண்டாம். தமிழர்கள் பெண்களைப் போல் உணர்வு மிகுந்தவர்கள்; இதயம் மிகுந்தவர்கள். அதனால்தான் மற்றவர்களுடைய தந்திரத்திற்கு ஆளாகி அல்லல் படுகின்றார்கள்; அடிமைப்படுகின்றார்கள். அறிவு மிகுந்த பெண்களே அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற முடியும். அதுபோல், அறிவு மிகுந்த நாடே, உணர்வு குறைந்திருந்தாலும் சரி, அழியாமல் வாழ முடியும்.

குழந்தைக்கு உணர்ச்சி மிகுதி; தொழிலாளர்க்கு உணர்ச்சி மிகுதி; பலம் குறைந்தவர்களுக்கு உணர்ச்சி மிகுதி; அடிக்கடி சினம் கொள்கிறவர்களுக்கு உணர்ச்சி மிகுதி. இவ்வளவு ஏன்? காட்டுமிராண்டிகளுக்கும் உணர்ச்சி மிகுதி; வறியவர்களுக்கும் உணர்ச்சி மிகுதி. ஆகையால் உணர்ச்சி சிறந்தது சிறந்தது என்று சொல்லி உணர்ச்சியைப் போற்றியது போதும் அம்மா! போதும். நாட்டின் நன்மையைக் கருதியாவது மூளை வளர்ச்சியைப் பெருக்கவேண்டும்.

மூளை, முன்னே தான் அழியாமல் காத்துக்கொள்ள வல்லது; பிறகு பிறருக்கும் உதவ வல்லது. அறம் காக்கும் கருவி என்றும், பகைவரும் அழிக்க முடியாத அரண் என்றும் அறிவைத் திருவள்ளுவர் புகழவில்லையா? அதற்கு மாறாக, இதயம் மற்றவர்களுக்காகக் கசிந்து கசிந்து தானும் அழிந்து மற்றவர்களையும் அழிக்குமோ என்று அஞ்சுகின்றேன்.

அம்மா! இவ்வளவு ஏன்? நம் பெரிய தாத்தா குடும்பம் எப்படி இருக்கின்றது? உணர்ச்சி மயமான ஆட்கள். அடிக்கடி போராட்டம்; ஆயிரம் தொல்லைகள்; ஆளுக்கு ஒரு வழி; எல்லோரும் அல்லல் படுகின்றார்கள். தமிழ்நாட்டைப் போல் இருக்கின்றது அந்த நல்ல குடும்பம். எல்லாரும் தலைமை பெற விரும்புகின்றார்கள். யாரும் பணி செய்வதில்லை. இரண்டு மூன்று வாரங்கள் அந்தக் குடும்பத்தார் உணர்ச்சியை அப்பால் ஒதுக்கிவைத்து அறிவோடு வாழ்வார்களானால், ஒற்றுமையும் பார்க்கலாம், முன்னேற்றமும் பார்க்கலாம் என்று நான் நம்புகிறேன். நம் எதிர்வீட்டாரையும் எண்ணிப்பார் அம்மா! எல்லோரும் இதயம் குறைந்த ஆட்கள்; மூளை வளர்ந்தவர்கள். தனித்தனியே வாழும்போதும் தம் தம் கடமையைச் செய்துகொண்டு நன்றாக வாழ்கிறார்கள். ஒன்று கூடும் போதும் அமைதியாகப் பழகுகின்றார்கள். குடும்ப அளவிலேயே உய்வதற்கும் உயர்வதற்கும் உணர்ச்சி இடையூறாக இருந்தால் நாட்டைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

தனி மனிதர் உயர்நிலை அடைவதற்கு உணர்ச்சி துணை செய்கின்றது என்று குறித்தேன். அவர்களும் எல்லையைக் கண்டபோது உணர்ச்சியைக் குறைத்து வாழ்ந்து தொண்டு செய்கின்றார்கள். புத்தர் வாழ்க்கை

உணர்ச்சிப் பெருக்காய்த் தொடங்கியது ; அறிவொளி யாய் நிறைந்தது ; குழந்தையை இழந்து அழுது புலம் பிய தாய்க்கும் அறிவாக நின்று தேற்றும் வழிகண் டார் ; காந்தியடிகளின் வாழ்க்கை, கண்ணீர் வெள்ள மாய்த் தொடங்கியது ; கடமைச் சுடராய் வளர்ந்தது ; வாழ்க்கைத் துணைவியின் ஆவி பிரிந்ததைக் கண்ட போதும் இரண்டொரு துளிக் கண்ணீரே அரும்பும் நிலைமையுற்றார். அதனால்தான் இத்தகைய சான்றோர்கள் கோடிக்கணக்கான மக்களின் கண்ணீரைத் துடைக் கும் ஆற்றலைப் பெற்றார்கள்.

ஆகையால் தாமும் வாழ்ந்து உலகத்தையும் வாழ வைக்க வேண்டுமானால், நீ எழுதியவாறு பிரிவும் பிளவும் இல்லாத நல்ல உலகம் காண வேண்டு மானால், தமிழர்கள் முதலில் தாம் திருந்த வேண் டும். கொஞ்சம் தன்னலம் உடையவர்களாக—அதா வது ஓரளவாவது நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் உடையவர்களாக—வாழ்ந்து தற்காப்புத் தேடிக்கொள்ள வேண்டும். முதல் வகுப்பிலே எல் லாரும் உட்கார்ந்து விரல்விட்டு எண்ணிக் கணக்குக் கற்றுவருகின்றார்கள். அந்த வகுப்பில்தான் தமிழனும் இருந்து கற்க வேண்டும். தமிழனுக்கு மனக்கணக்குப் பழக்கமாக இருக்கலாம். ஆனால் அவனும் விரல்விட்டு எண்ணிக் கணக்குப் போட வேண்டும். இல்லையானால் அவனுக்கு வகுப்பில் இடம் கிடைக்காது ; அவன் வெளியேற்றப்படுவான் ; பள்ளிக் கல்வியே பறி போகும். தமிழன்மேல் குறை இல்லை ; அவன் முன் னேற்றமாக மனக்கணக்கு அறிந்திருப்பதே குற்றம். அதற்கு என்ன செய்வது ? " யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்ற பூங்குன்றனார் அரசியல் துறையில் ஓர் ஐன்ஸ்டின். அந்த மரபில் வந்தவனுக்கு விரல்

விட்டு எண்ணும் சிறு பிள்ளைக் கணக்கு, தொல்லையாக இருக்கலாம். ஆனாலும் கற்றுத்தான் தீர வேண்டும். வகுப்பில் இடம் போகாமல் காத்துக்கொண்டால்தான் வளர்ச்சிக்கு இடம் இருக்க முடியும்.

வாழ்க்கையில் அறம் அடிப்படியாக அமையும் வரையில் இப்படித்தான் உலகத்தில் குறுகிய நோக்கம் பரவி நிற்கும். இப்போது பணமே அடிப்படையாக இருக்கின்றது; ஆகலால் வாழ்க்கை அலைமோதும் வெள்ளமாக இருக்கின்றது. வெள்ளம் தணிந்தால்தான் உலக அமைதிக்கு உரிய பரந்த நோக்கம் விளங்க இடம் உண்டு. அதற்கு முன்னே மோதும் அலைகளின் ஆற்றலை மறந்து நின்றால், காவிரிப் பெருக்கையும் கடலின் கொந்தளிப்பையும் மறந்து ஆடிய ஆட்டனத்தி போல் இரையாக வேண்டும்; ஆதிமந்தி போல் தமிழகமும் புலம்பி அலைய வேண்டும். பரந்த நோக்கம் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை; முன்னே வெள்ளமும் கொந்தளிப்பும் தணியட்டும் என்று சொல்கின்றேன்; பரந்த நோக்கம் வாழ்வதற்கு வேண்டிய சூழலை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்கின்றேன்.

அன்புள்ள,

எழில்.